Registered as a NewsPaper

விலை ரூபா–8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

க்கங்கள்–12

தம் –15 | திருவள்ளுவர் ஆண்டு– 2036 | தை–19 | 01–02–2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை –349

S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 (சி-11252)

# லாலி உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள

# விவசாயக் காணிகளுக்கு மாற்று நிலம்!

## யர் நீதிமன்றில்அரசாங்கம் ஆலோசனை

(கொழும்பு)

**யாழ்ப்பாணம் பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் விவசாய நடவழிக்கை ளை மேற்கொள்வதற்குப் பதிலாக மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு சாங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளது.**

அதியுயர் பாதுகாப்பு வலயம் ணமாகத் தமது வாழ்விடம் பட விவசாய நிலம் பறிபோயுள் ாகவும், இது தமது அடிப்படை ரிமையை மீறுவதாகவும் கூறி ழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராஜா உட்பட்ட விவசாயிகள் தாக்கல் செய்த மனுவின் விசாரணை நேற்று உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றபோது கருத்துரைத்த அரச சட்டத்தரணி உதித்த ஈலஹேவா இந்த யோசனையைத் தெரிவித்தார். அதியுயர் பாதுகாப் புப் பிரதேசத்தில் உள்ள காணியை விவாசாயத்துக்கு வழங்கினால் அதன் காரணமாகப் பாதுகாப்புக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவு.வில் 13 வயதுச் சிறுமி கடத்தல்;

## விடுவிக்க 25 இல.ரூபா கப்பம் கோரல்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் சிறுமி ஒருத்தி கடத்தப்பட்டுள்ளார். கடத்தியவர்கள் சிறுமியை விடுவிக்க 25 இலட்சம் ரூபா கப்பம் கோரியுள்ளனர்.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் தரம் 08 வகுப்பில் கல்விகற்கும் 13 வயதுச் சிறுமியான திரேசா என்பவர் நேற்று முன்தினம் (ஞாயிறு) மாலை தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்குச் சென்றுள்ளார். இரவுவரை சிறுமி வீடு திரும்பாததால் அவரின் பெற்றோர் பல இடங்களிலும் தேடியபோதும் சிறுமியைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இல.30, கோயில்வீதி, குருமன்காட்டில் உள்ள சிறுமியின் வீட்டிற்குத் தொலைபேசி அழைப்பு ஒன்றை ஏற்படுத்திய இனந்தெரியாதோர் பெற்றோருடன் தொடர்புகொண்டு உங்களின் பிள்ளையை நாமே கடத்தியுள்ளோம் அப்பிள்ளையை விடுதலை செய்வதா யின் எமக்கு 25 இலட்சம் ரூபா தரவேண்டும் எனக்கோரியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக சிறுமியின் பெற்றோர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். (01)

### திருக்கோவில் அனர்த்த நிவாரணக்குழுக்கூட்டம்

## அழையா விருந்தாளியாக ஜே.வி.பி யின் பா.உ.

## புலிகளின் பிரதிநிதிகள் வெளிநடப்பு!

அம்பாறை மாவட்டம் திருக் காவில் பிரதேச ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக் குழுக் கூட் த்தில் ஜே.வி.பி. பாராளுமன்ற றுப்பினர் வசந்த பியதிஸ்ஸ ழையா விருந்தாளியாக கலந்து காண்டமைக்கு ஆட்சேபனை தரிவித்து அக் கூட்டத்தில் கலந்து கொண்ட விடுதலைப்புலி உறுப் பினர்கள் வெளியேறினர்.

சிறிலங்கா சனாதிபதிசெய லகத்தின் பணிப்புரைக்கமைய மேற் படி குழுவில் பிரதேச செயலாளர் வி.கே.தவராஜா தலைமையில் பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப்படை, விடுதலைப் புலி கள் மற்றும் மதப் பிரமுகர் என 6 பேர் அங்கம் வகிக்கின்றனர். இன்று நடைபெறவிருக்கும் அம் பாறை மாவட்ட ஆழிப்பேரலை அன[illegible] நிவாரணக் குழுக் கூட்டத்தில சமர்ப்பிக்க வேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நவீன மீன்பிடி உபகரணங்கள்

## யாழ்.குடாநாட்டிற்கு வழங்க நோர்வே முன்வந்துள்ளது!

சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டு மீன வர்களின் கடற்றொழில்துறையை மேம்படுத்தும் நோக்கில் நவீன மீன்பிடி வசதிகளுடன் கூடிய "மல்ரிபோட்" எனும் பல் தொழில் நுட்ப மீன் பிடி வசதிகளுடன் கூடிய மீன் பிடிக்கலத்தொகுதி ஒன்றை வழங்குவதற்கு நோர்வே முன்வந்துள்ளது.

யாழ்.குடாநாட்டின் மீன் பிடி வளம் மிக்க கடற்பரப்பில் நிரந்த ரமாக நிறுவப்படும் இம் "மல்ரி போட்" சுமார் 25 அடி நீள, அகலம் கொண்டதாகக் காணப்படும்.

கணினிமயப்படுத்தப்பட்ட தூண்டில் வசதிகள், வலைகள், மற்றும் மீன்பிடி உபகரணங்களை யும், கடலுணவுகளைப் பதனிடும் அறைகள் குளிரூட்டி வசதிகள், தொழிலாளர்களுக்கான தங்குமிட வசதிகள் என்பவற்றுடன் கூடிய தான இம் மல்ரிபோட் தொகுதியின் பெறுமதி 450 மில்லியன் டொலர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட

## தொடருந்து நிலைய ஊழியர்களின்

## தொடருந்து பாதை மறியல் போராட்டம்

(திருகோணமலை)

சுனாமி அனர்த்தத்தினால் திக்கப்பட்ட திருகோணமலை ாடருந்து நிலைய ஊழியர் ின் குடும்பத்தினர், தங்களுக்கு ச நிவாரண உதவி ஒருமாத காலமாகியும் வழங்கப்படாததைக் கண்டித்தும், அரச நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கோரியும் நேற்று திங்கள் காலை திருமலை தொட ருந்து நிலையத்தில், கொழும்பு பயணிகள் தொடருந்து புறப்ப டாது தடுத்து நிறுத்தி, தொடருந்து தண்டவாளத்தில் குறுக்காக அமர்ந்திருந்து மறியற் போராட்டம் நடத்தினார்கள். உடனடியாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ர்வதேசம் வழங்கும் மனிதாபிமான உதவிகள் டக்குக் கிழக்கிற்கும் பகிரப்பட வேண்டும்

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு தச சமூகத்தினரால் வழங்கப்படும் மான உதவிகள் யாவும் தமிழர் பகுதிகளுக்கும் சரிவரப் பகிர்ந் டல் வேண்டும்.

ாறு யாழ். மாவட்ட அரசசார்பற்ற ங்களின் இணையம் வலியுறுத் தியுள்ளது.

சுனாமியால் மிகமோசமாகப் பாதிக் கப்பட்ட இலங்கைக்கு சர்வதேச சமூகத்தின ரால் பெருமளவிலான உதவிகள் வழங் கப்பட்டு வருகின்றபோதும் அவை சரிசம மாகப் பங்கிடப்படுவதில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி யின் பிரச்சார நோக்கு நிவாரண நடவடிக்கை முறியடிப்பு


பருத்தித்துறை மந்திகையில் அமைந் துள்ள ஈ.பி.டி.பி.யின் முகாமில் வைத்து பிரச்சார நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட சுனாமி நிவாரண நடவடிக்கை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டு முறியடிப்புச் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் தொடக்கம் தேச விரோதிகள் தமக்குச் சார்பான சிலரைக் கட்டாயத்தின் பேரில் வரவழைத்து சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டவருக்கான நிவா ரணம் வழங்கிவந்தனர். ஆனால் சுனாமி யால் பாதிக்கப்பட்ட மக்கள் இதில் பங்கு கொள்ளவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் தளபதிகள் கேணல் சூசை, கேணல் சொர்ணம், கேணல் பானு, கேணல் ஜெயம்







## கொரிய மருத்துவக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் சேவை

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக கொரியநாட்டு குயுங்பூக் தேசிய பல்கலைக்கழக மருத்துவபீடப் பேராசிரியர் மாணவர்கள் மற்றும் தொழில் நுட்பத் துறை மாணவர்கள் 40 பேர் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாணம் வருகைதந்து 18நலன் புரி நிலையங்களிலும் உள்ள மக்களை நேரடியாகச் சென்றுபார்வையிட்டு மருத்துவ உதவி வழங்கியதோடு மேற்படி நலன்புரி நிலையங்களில் சுகாதாரத்தினைப் பேணுமுகமாக தொற்றுநீக்க மருத்துகளையும் விசிறியுள்ளனர்.

மேலும் கடந்த சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம் பருதியைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி கொரிய பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டக் சுயுங்ஜேமையும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் யாழ் தென்இந்தியத்திருச்சபையைச் சேர்ந்த ராஜ. அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர். (சு)

### -காங்கேசன்துறை சீமெந்து-

## தொழிற்சாலையை புனரமைக்க ஜப்பான் நிதி ஒதுக்கீடு!

யாழ் காங்கேசன் துறை சீமெந்துத்தொழிற்சாலையை மீளப்புனரமைத்து இயக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஜப்பான் அரசாங்கம் முன்வந்துள்ளது. கடந்த கால யுத்தம் காரணமாகவும் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் பாதிக்கப்பட்டுப்போயுள்ள யாழ். குடாநாட்டினைக்கட்டியெழுப்புவதுடன்,இளைஞர்யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் யாழ். குடாநாட்டின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தும் நோக்குடனுமே இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. ஜப்பானின் நவீன மயப்படுத்தப்பட்ட தொழில் நுட்பவசதிகளுடன் புனரமைத்து மீள இயங்க வைக்கப்படவுள்ள இச் சீமெந்து தொழிற்சாலையின் புனமைப்புகளுக் கென ஜப்பான் பல மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. (33)

## செட்டிகுளத்தில் இரண்டு வீடமைப்புத்திட்ட வீடுகள் திறப்பு

(வவுனியா செய்தியாளர்)

செட்டிகுளம் பிரதேசத்தில் மெனிக்ப, கிறிஸ்தவக்குளம் ஆகிய இரு இடங்களில் புதிய வீடமைப்புத் திட்டங்களில் அமைக்கப்பட்ட வீடுகளின் திறப்புவிழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

செட்டிகுளம் பிரதேச செயலர் செல்வி. சுகந்தி துரைச்சாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வீடமைப்புத்திட்டங்களில் உள்ள வீடுகளை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், வினோநோகராதலிங்கம், வவுனியா மாவட்ட அரச அதிபர் சி. சண்முகம் ஆகியோர் நாடாவை வெட்டி திறந்து வைத்தனர்.

வன்னிப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா சென்று அங்குள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தவர்களே இவ் வீடுகளில் குடியமர்த்தப்பட உள்ளனர். (10)

## ஐ.நா.புலம்பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் பணிப்பாளர் மட்டு.விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபானத்தின் புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பின் பணிப்பாளர் நாயகம் பிறன்சன் மக்கிலன் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒத்தாச்சிமடம் நலன்புரி நிலையத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்துள்ளார்.

இவர் அங்கு அமைக்கப்பட்டு வரும் தற்காலிகக் குடிசைகளைப் பார்வையிட்டதுடன் மண்முனை தென்எருவில் பிரதேச செயலாளர் பாஸ்கரனுடன் எதிர்காலத் திட்டம் குறித்துக் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் சான்றிதழைப் பெற்றுக்கொள்க

1999/2000 ஆண்டுக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. உரிய ஆசிரியர்கள் நாளைமறுதினம் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை புதுக்குடியிருப்பிலுள்ள வலயக் கல்விப் பணிமனையிலும் வரும் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை கோட்டக்கல்வி அலுவலகம் ஒட்டுசுட்டானிலும் வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் 12.00 மணிவரை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் வைத்து வழங்கப்படவுள்ளதாகவும் இதனை நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு போதனாசிரியர் சி.சுந்தரலிங்கம் அவர்கள் கேட்டுள்ளார். (08)

## கட்டுரைப் போட்டி

(பூநகரி)

பூநகரியின் கூட்டுறவு வரலாறு தொடர்பான கட்டுரைப் போட்டி பூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் நடாத்தப்படவுள்ளது.

இக்கட்டுரையில் பூநகரியின் ஆரம்பக் கூட்டுறவுவரலாறு தொடங்கி இன்றுவரையுள்ள நிலமைகள் எழுதப்படவேண்டும் இப்போட்டியில் வயது வேறுபாடு கவனிக்கப்படமாட்டாது.

எழுதியகட்டுரையை ப.நோ.கூ. சங்கத்திற்கு 10.02.2005 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும் என தலைவர் கார்த்திகேசு தெரிவித்துள்ளார்.


### வரி விளம்பரம்

**காணி விற்பனைக்குண்டு**

ஜெயந்திநகர், இல.73 இல் 1/2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.தொடர்புகளுக்கு வை.மகேந்திரராசா, இல.84 ஜெயந்திநகர். (5472)



## நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நீரின் இயற்கைப்பண்புகளைக் கண்டறியும் பகுதியூடாக பின்வரும் பணிநிலைகளுக்கு ஆட்களை சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகத் தேர்வு 04.02.2005ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணி -1.00 மணி வரை கந்தசுவாமி கோயில் அருகாமையிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது. இப்பணிநிலைக்கு தகுதியானவர்கள் தமது கல்வி, ஏனைய தகைமைஅனுப வசான்றிதழ்களுடன் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

### பணிநிலை-முதுநிலை நீரியல் பண்பு விஞ்ஞானி [01 வெற்றிடம்

**தகைமைகள்:-**

- *இராசாயனவியல் பட்டமோ அல்லது இதற்கு இணையான விஞ்ஞான பட்டமோ பெற்றிருத்தல் வேண்டும்.*
- *நீரியல் பண்புகள், பகுப்பாய்வுகள் மற்றும் பரிசோதனைகளைச் செய்யக்கூடியவர் விரும்பத்தக்கது.*

*குறிப்பு:-*

நவீன உபகரணங்களை உபயோகிக்கும் முறைகள் பயிற்றுவிக்கப்படும். வெளிநாடுகளில் உள்ள சர்வதேச தரம் வாய்ந்த பரிசோதனைச்சாலைகளில் பயிற்சி பெறுதலுக்கான சந்தர்ப்பங்கள் தெரிவானவர்களுக்கு வழங்கப்படும். நீரியல்பண்புகள் பிரிவில் தினசரிசெயற்பாடுகளையும் பரிசோதனை நீரியல் தொழில் நுட்ப உதவியாளர்களை மேற்பார்வை செய்தலும் நாளாந்த கடமைகளாக அமையும்.கிணறுகளைப் பரிசோதனை செய்யும் செயற்றிட்டங்களும் நீரியல் பண்புகளின் அறிக்கைகளைத் தயாரித்தலும், அவற்றை செயற்றிட்டப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தலும் மற்றைய கடமைகளாக அமையும்.

### பணிநிலை-நீரியல் பண்பு தொழில் நுட்பவியலாளர்கள் [05 வெற்றிடம்]

**தகைமைகள்:-**

- *ஆகக்குறைந்தது க.பொ.த.உயர்தரத்தில் கணித விஞ்ஞான பிரிவில் இரசாயனவியல் பாடத்துடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

குறிப்பு:- சுனாமியால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிணறுகளின் நீரின் நீரியல் பண்புகளை பரிசோதனை செய்வதற்கும் இவற்றுக்கான மிக நவீன உபகரணங்களை உபயோகிப்பதற்கும் பயிற்சி அளிக்கப்படும் மிக நவீன முறையின் நீரியல் பண்புகளை அறிந்து அவற்றை செயற்படுத்த ஒரு அரிய சந்தர்ப்பமாக இப்பணி அமையும்.

(சி-11301)



## சுனாமி ஓவியப் போட்டியும், கண்காட்சியும்

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, எதிர் வரும் பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி மேற்படி கண் காட்சியையும், போட்டியையும் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. இதில் வடக்குகிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்வி கற்கும், ஆண்டு 5முதல் 13 வரையான மாணவர்கள் பங்குபற்றலாம்.

**நிபந்தனைகள்:-**

01) சுனாமி பேரனர்த்தத்தின் விளைவுகளையும் அதிலிருந்து மீள்வதற்கான நம்பிக்கை ஊட்டுவதுமான கருப்பொருளை ஓவியங்கள் கொண்டிருக்க வேண்டும்.

02) ஓவியங்கள் நவீனம் சார்ந்ததாகவோ, மரபு சார்ந்ததாகவோ அமையலாம் . 13'' நீளமும் 14'' அகலமும் கொண்டதாக வெள்ளைவரைதல்தாளில் அல்லது பிறிஸ்டல் போட்டில் அமைய வேண்டும்.

03) ஓவியங்களுக்கான வர்ண ஊடகமாக பஸ்ரல் வர்ணம், நீர் வர்ணம், தூள்வர்ணம், எண்ணை வர்ணம் இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தலாம். அல்லது கலப்பு ஊடகமாக அமையலாம்.

04) ஓவியங்கள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் அவ்வப் பகுதி வலயப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

கண்காட்சியில் சிறந்ததாகத்தெரிவு செய்யப்படும் ஓவியங்களை வரைந்த மாணவர்களுள் மூவருக்கு, வடக்கு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுவதோடு, பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

*ஆர்.தியாகலிங்கம்,*
*செயலாளர், கல்வி அமைச்சு,*
*வடக்கு கிழக்கு மாகாணம்.*

(சி-11302)

# இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் பொதுமக்கள்

## ஈராக் குறித்து பி.பி.சி தெரிவிப்பு

**ஈராக்கில் கடந்த 6 மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் கொல்லப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பொதுமக்கள் என்று லண்டன் பி.பி.சி தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.**

கடந்த ஆறு மாதங்களில் 3,274 பேர் கொல்லப்பட்டனர். இதில் 2,041 பேர் பொதுமக்களாகும். மேலும் தீவிரவாதிகளின் செயலால்1,233 பேர் இறந்தனர். என்று பி.பி.சி கூறியது. ஈராக் சுகாதாரத்துறை அமைச்சகத்தின் புள்ளிவிபரத்தின் அடிப்படையில் இத்தகவலை வெளியிடுவதாக பி.பி.சி கூறியது. இதை ஏற்க மறுத்தது ஈராக் இடைக்கால அரசு. தீவிரவாதக் கும்பலால் கொல்லப்பட்டவர்களையும் இராணுவத்தால் கொல்லப்பட்டோர் பட்டியலில் சேர்த்து விட்டனர் என்று வாதிட்டது. தவறான தகவல்களுக்காக பி.பி.சி மன்னிப்புக்கேட்கவேண்டும் என்று ஈராக் அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.



ஒரு ஈராக்கியத் தீவிரவாதக்குழு பிரித்தானிய விமானத்தைத் தாமே சுட்டு வீழ்த்தியதாக உறுதிப்படுத்துகின்றனர்.

# சி -130 விமானம் ஈராக்கில் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது

## அமெ.பிரிட்டிஷ் படையினர் பலர் பலி


(லண்டன்)

பாக்தாத்தின் வடமேற்குப் புறத்தில் நேற்று முன்தினம் இராணுவ விமானம் மொன்று தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப் பட்டுள்ளது இதில் பிரிட்டிஷ் படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளதாகப் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிற்கு அமெரிக்க-பிரிட்டிஷ் கூட்டுப்படையினரை ஏற்றி இறக்கப் பயன்படுத்தப்படும் சி-130 கேக்குளஸ் ரக விமானமே சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. இந்த விபத்தில் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயா குறிப்பிடப்படாத போதிலும் அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ துருபபினர் பலியாகியுள்ளதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்தார்.

விமானத்தின் சிதைவுகள் திறந்த வெளியொன்றில் கிடப்பதைக் உலங்குவானூர்தி ஒன்றின் மூலம் அறியமுடிந்ததாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான விமானத்தில் 110 படையினர் சென் றதாக செய்தியொன்று தெரிவிக் கிறது. மேற்படி விமானம் பாக்தாத் திலிருந்து மலாத் நோக்கி சென்று கொண்டிருந்தபோதே சுட்டு வீழ்த் தப்பட்டுள்ளது. இதே வேளை இச்சம்பவத்திற்கு ஈராக் தீவிரவாத அமைப்பொன்று உரிமை கோரியுள்ளது.



பாலஸ்தீனப் பிரதமர் மகமூட் அப்பாஸ் ரஷ்ய சனாதிபதி விளாடிமீர் புட்டினைச் சந்திக்கின்றார்



மேற்குக்காஸா நுழைவாயில் சோதனைச் சாவடியினை பலஸ்தீனியர் கடப்பதைத் தடுக்கும் இஸ்ரேலியப் படையினர்.

# காஸாவிலிருந்து யூதரை வெளியேற்றும் இஸ். பிரதமரின் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

மத்திய கிழக்கின் காஸாநிலப் பரப்பிலிருந்து யூதக்குடியேற்ற வாசிகளை வாபஸ் பெறும் இஸ்ரேலின் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டுப் பாராளு மன்றத்தின் முன்பாக பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இந்தத் திட்டத்தை இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் அங்கீகரிக்குமுன்னர் சர்வசன வர்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும். என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரியவருகையில், மத்திய கிழக்கில் இஸ்ரேலிய பலஸ்தீனியர்களுக்கிடையிலான முறுகல் நிலைகளை முடிவிற்குக் கொண்டு வரும் பொருட்டு காஸா நிலப் பரப்பிலிருந்து யூதக் குடியேற்ற வாசிகளை வாபஸ் பெறும் திட்டத்தை இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல்ஷரோன் கடந்த வருடம் அறிவித்திருந்தார். இதன் படி மேற்குக்கரையிலுள்ள நகரங்களை பலஸ்தீன அதிகாரி களின் ஆளுகைக்குள் கொண்டு வரப்போவதாக இஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்தது.

பிரதமர் ஷரோனின் இத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து காஸாவிலுள்ள யூதக் குடியேற்ற வாசிகள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர் .இதில் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# சூடானில் தற்போதும் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றன

## -ஐ.நா.பொதுச்செயலர் கொபிஅனான்

சூடானில் தற்போதும் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருவதாக ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

நைஜீரியாவில் நடைபெற்று வரும் 25 ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களது கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஆபிரிக்கக் கண்டத்தில் தற்போது நிலவும் பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு 2002 ஆம் ஆண்டில் ஆபிரிக்க யூனியன் உருவாக்கப் பட்டது.

இந்த யூனியனின் 25 நாடுகளின் தலைவர்கள் நைஜீரியாவில் கூடி ஆராய்ந்து வருகின்றனர்.

இரண்டு நாட்கள் நடைபெறும் மாநாட்டில் வறுமை ஒழிப்பு, ஐக்கிய நாடுகள் அமைப்பின் மறுசீரமைப்புத்திட்டங்கள் ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலான மோதல்களை முடிவிற்கு கொண்டு வருதல் போன்ற பிரச்சினைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது.



பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்று சனி முஸ்லிம்களிற்கு ஆதரவாக ஒன்று சேர்ந்தோர் வீதிக்குறியீட்டைக் கொழுத்துகின்றனர்

# ஆசிய நாடுகள் பலவற்றில் சுனாமி எச்சரிக்கை மையம்

## -ஆசிய நாடுகளின் கூட்டத்தில் முடிவு

ஆசியப் பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் "பிராந்திய சுனாமி பேரழிவு முன்னெச்சரிக்கை மையங்களை" அமைக்கலாம் என்று தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய நாடுகளின் 2 நாள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்தியப் பெருங்கடல் பகுதியில் பூகம்பத்தை கண்காணிக்கும் கருவிகளையும் சுனாமி முன் எச்சரிக்கை கருவிகளையும் நிறுவி அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைத் திரட்டி , பகுத்து ஆசியப்பகுதியில் உள்ள நாடுகளுக்கு உரிய எச்சரிக்கைகளையும் தகவல்களையும் அனுப்பும் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக விவாதித்து முடிவுசெய்ய தாய்லாந்தின் புகேட்தீவில் 28,29 ஆம் திகதிகளில் அக் கூட்டம் நடந்தது. அதில் பல ஆசிய நாடுகள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஐ.நா பிரதிநிதி உட்பட 57 பேர் பங்கு கேற்றனர். சுனாமி முன் எச்சரிகை கட்டமைப்பை தம் நாட்டு தலைநகர் பாங் கொக்கில் தான் அமைக்க வேண்டும் என்று தாய்லாந்து கூறியுள்ளது. இந்தோனோசியாவும் இந்தியாவும் தம் நாட்டில் அமைக்கவேண்டும் என்று வலியுறுத்தின. எங்கு அமைப்பது என்பதில் நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் முடிவெடுப்பதில் முட்டுக்கட்டை ஏற்பட்டது. இறுதியா ஆசிய நாடுகள் பலவற்றிலும் அத்தகைய சுனாமி பேரழிவு முன் எச்சரிக்கை மையங்களை அமைப்பது என்றும் அத் தகவல்களை மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

# அல்ஜசீரா தொலைக்காட்சி நிறுவனம் அலைவரிசையை விற்க முடிவு

அல்ஹைய்தா தீவிரவாதிகளின் ஒலி நாடாக்களை அடிக்கடி ஒளிபரப்பி பிரபலமான தொலைக காட்சி அல்ஜசீரா அது கட்டார் நாட்டுக்குச் சொந்தமானது. அந்த அலைவரிசை முஸ்லிம்களை தூண்டி விடுவதாகவும், தவறாக வழி நடத்துவதாகவும் அமெரிக்கத் தலைவர்கள் கட்டாரிடம் புகார் கூறினர்.

அல்ஜசீரா காரணமாக இரு நாட்டு உறவில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் அந்த அலைவரிசையை விற்றுவிட கட்டார் நாடு முடிவு எடுத்துள்ளது."சமீபத்தில் தொலைக்காட்சி அலைவரிசையில் செய்திப்பிரிவில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்து இருக்கிறோம். அலைவரிசையை விற்பதற்கு வழி வகைகளை கண்டறிவதும் அவர்களின் பணிகளில் ஒன்று ஆகும்". என்றுஅல்ஜசீரா நிறுவன அதிகாரி கூறினார்.

# தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பாவித்து பெருமளவு

# தென்பகுதி றோலர்கள் முல்லைக் கடற்பரப்பில் மீன்பிடி!

## முல்லை மீனவர்கள் கேணல் சூசையிடம் முறைப்பாடு

(முல்லை)

**முல்லைத்தீவு கடற் பகுதியில் தென்பகுதி மீனவர்கள் பெருமளவு றோலர் படகுகளில் வந்து தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி கடல் வளத்தை சுரண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். இதுதொடர்பாக முல்லை. மீனவர்கள் தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசையிடம் முறையிட்டுள்ளார்கள்.**

சுனாமி பேரனர்த்தத்தால் பெருமளவு உயிரிழப்புக்களையும், உடமையிழப்புக்களையும் சந்தித்துள்ள நிலையில் தென்னிலங்கை மீனவர்களின் நடவடிக்கையால் மேலும் நெருக்கடிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து வரும் றோலர் படகுகள் சிறிலங்கா அரசினால் தடை செய்யப்பட்டுள்ள சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி முல்லைத்தீவுக் கடற்பகுதியில் மீன் இறால் என்பனவற்றை பெருமளவில் பிடித்துச் செல்வதை அவதானிக்க முடிவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த சனிக்கிழமை இரவு பெருமளவான மின் விளக்குடன் இவ்வாறான றோலர் படகுகள் மீன் பிடிப்பதை பார்த்த முல்லை. மீனவர்கள் பெரும் கவலையுற்றுள்ளார்கள்.

இத்தகைய நடவடிக்கைகள் குறித்து மீனவர்கள் தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதியிடம் முறையிட்டுள்ளார்கள். (20)



கடல் அனர்த்தத்தினால் சேதமாக்கப்பட்ட முல்லைத்தீவு கரையோர பகுதியில் மீண்டும் ஒரு அனர்த்தத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் மண் அரண் கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டு வருதை படத்தில் காணலாம். (படம் வரன்)


### சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற

## திருமலை ரயில்வே ஊழியர்களின் குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிவாரண உதவி

டிசம்பர் 26 சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை ரயில்வே ஊழியர்களின் குடும்பங்களுக்கு இதுவரை அரசாங்கத்தின் நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை. இதனால் ரயில்வே விடுதிகளில் தங்கியுள்ள இவ்வூழியர்களின் குடும்பங்கள் நேரில் விடுத்த வேண்டுகோளை ஏற்று திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ரயில்வே விடுதிக்குச் சென்று நிவாரண உதவிகளை வழங்கியது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டப் பணிப்பாளர் ஜெகா அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார் " சுனாமி அனர்த்தத்தின் போது எமது விடுதிகள் சுமார் 5 அடி நீரில் மூழ்கின. எமது உடமைகள் மற்றும் பொருட்களை நாம் இழந்தோம் இரண்டு தினங்களுக்கு மேலாக சரியான உணவு கூட எமக்குக் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள், கிராம அதிகாரிகளை அணுகி முறையிட்டோம். அவர்கள் எம்மை ஏறிட்டுப் பார்க்கவில்லை. சுனாமியின் பின்னர் அரச அதிகாரிகள் நேரில் வந்து பார்த்தும் உதவி செய்ய முன் வரவில்லை. எமது மேலதிகாரிகளும் எம் நிலை குறித்து மற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொண்டனர். யாரிடம் போய் எமது அவல நிலையைச் சொல்வது? கடைசியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் முறையிட்டோம்." என்று மூன்று இனங்களையும் சேர்ந்த திருமலை ரயில்வே ஊழியர்கள் புன்வாழ்வுக் கழகத்தின் நிர்வாகிகளிடம் தெரிவித்தனர்.

டிசம்பர் 26 சுனாமி அலையில் விடுதிகள் மூழ்கியதை அடுத்து அனைத்து ரயில்வே திணைக்கள ஊழியர்களும் திருமலை ரயில் நிலைய மேல் மாடியில் தஞ்சம் புகுந்தனர் .பின்னர் இராணுவம் சென்று அவர்களை பஸ்களில் ஏற்றி பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்றிருந்தது. (25)



வட்டக்கச்சி பொதுச் சந்தையடிக்கு அண்மையாக பிரதான வீதியிலுள்ள நாவலடி கோஸ்வே மிக மோசமாக சேதமடைந்துள்ளது. தற்போது நீர்ப்பாசன வாய்க்காலில் செல்லும் நீரின் பெரும் பகுதி இதனூடாகத் தொடர்ச்சியாக வெளியேறி வருகின்றமையால் மக்கள் போக்குவரத்தில் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுக்கின்றார்கள். தற்சமயம் பயணிகள் பேருந்து சேவைக்குக்கூட இந்த நீர் வெளியேறும் பகுதியால் இடையூறு ஏற்பட்டுள்ளது. (படம் : ரூபன்)

### அடகு சேவை

கிராமிய அபிவிருத்தி வங்கி பூநகரி கிளையினரால் தங்க நகை அடகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

பூநகரி பிரதேச வாழ் மக்களின் வேண்டுகைக்கமைவாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதென கிராமிய அபிவிருத்தி வங்கி மேலாளர் தெரிவித்துள்ளார். (சோ)

## உணவு உரிமத்திற்கு விண்ணப்பிக்குக

வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு உட்பட்ட உணவு உற்பத்திகள், விற்பனைகள், களஞ்சியங்கள் ப.நோ.கூ. சங்க நுகர்ச்சி விற்பனைகள், நடமாடும் உணவு விற்பனை கள், பல்பொருள் வாணிபங்கள், பல்பொருள் பெட்டிக்கடைகள் உள்ளடங்கலான அனைத்து உணவு கையாளும் நிலையங்களும் தமிழீழ சுகாதார சேவைகளின் 2005ஆம் ஆண்டிற்கு உணவு உரி மத்திற்கு 01.02.2005 முதல் 01.03.2005 வரையான காலப் பகுதிக்குள் மாவட்டப் பணிமனைகளில் விண்ணப்பித்துக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (சோ)

## மருத்துவ உரிமத்திற்கு விண்ணப்பிக்குக

வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு உட்பட்ட தனியார் மருத்துவ நிலையங்கள் மருந்து விற்பனை நிலையங்கள், உற்பத்தி நிலையங்கள், நடமாடும் மருந்து விற்பனை மூக்குக் கண்ணாடி வழங்கல், பல்கட்டும் நிலையங்கள் உள்ளடங்கலான அனைத்து தனியார் மருத்துவ நிலையங்களும் தமிழீழ சுகாதார சேவைகளின் 2005 ஆம் ஆண்டிற்கான மருத்துவ உரிமத்திற்கு 01.02.2005 முதல் 01.03.2005 வரையான காலப் பகுதிக்குள் மாவட்டப் பணிமனைகளில் விண்ணப்பித்துக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (சோ)

## நிரந்தரக் காணி அனுமதிப் பத்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தினால் கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்திலுள்ள தற்காலிகக் காணி அனுமதிப் பத்திரங்களை நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் பாரதிபுரம் கிராமத்தில் 146 காணிகளுக்கும், திருவையாறில் 47 காணிகளுக்கும், கிளி. இரத்தினபுரம் கிராமத்தில் 15 காணிகளுக்கும் கடந்த வாரம் கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தினால் நிரந்தரக் காணி உரிமைப் பத்திரம் (எல்.டி.ஓ. பொமிற்) வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## உந்துருளி–பாரவூர்தி விபத்தில் உந்துருளியில் சென்றவர் படுகாயம்

(அலுவலகசெய்தியாளர்)

உந்துருளி பாரவூர்தியுடன் மோதியதில் உந்துருளியில் பயணித்தவர் இடது கைமுறிந்து காயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் ஏ-9 வீதியில் பரந்தன் பூநகரிக்குத் திரும்பும் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட தமிழீழ வீதிப்போக்குவரத்து காவல்துறையினர் உந்துருளி ஓட்டுனரையும், பாரவூர்தி ஓட்டுனரையும் கிளி. மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

### புதிய நிர்வாகத் தெரிவு

கிளிநொச்சி பிரதேசத்தின் வெண்மை சங்கத்தின் 2005ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் கிளி பிரதேசப் பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்றது. இதில் நிர்வாகத் தலைவராக தவராசா தெரிவு செய்யப்பட்டார். இதன்போது இவ் நிர்வாகத்தின் செயற்பாடு தொடர்பாக போப்பிரியன் கருத்துரை வழங்கினார். (சோ)

## எமது சொந்த இடங்களுக்கு செல்லவே விரும்புகிறோம் உயர் பாதுகாப்பு வலயம் அதற்குத் தடையாகவுள்ளது

### வவுனியா அகதி முகாம் வாழ் மக்கள் தெரிவிப்பு

(வவுனியா)

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த நாங்கள் எங்களுடைய பழைய இடங்களுக்கு செல்லவே விரும்புகின்றோம். ஆனால் உயர்பாதுகாப்பு வலயம் எங்களுக்குப்பெரும்தடையாகவுள்ளது என கடந்த 15 ஆண்டுகளாக அகதிமுகாமில் வசிக்கும் மக்கள் தெரிவித்தனர்.

1990ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்களால் வீடுகளை விட்டு வெளியேறிய இவர்கள், இந்த சமாதான சூழலிலும் நிவாரண உதவியை நம்பியே வாழ்க்கை நடத்தி வருகின்றார்கள். உயர்பாதுகாப்பு வலயத்தை நீக்கி எமது பழைய இடங்களில் எம்மை குடியமர்த்த அதிகாரிகள் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என தாலிக்குளம் அகதிமுகாம் தலைவர் பெரியசாமி முத்து தெரிவித்தார். தாலிக்குளம் அகதிமுகாமில் 48 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 260 பேர் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவருமே வேலன்குளம் சின்னதம்பனை, செங்கபடையான். கோவில்புளியங்குளம், மடுக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள். 1999ஆம் ஆண்டு இந்த முகாமிற்கு வந்ததாகவும், அதற்கு முன்னர் மடு. தட்சணாமருதமடு, கோவில் மோட்டையில் இடம்பெயர்ந்து வசித்து வந்ததாகவும் தலைவர் முத்து தெரிவித்தார். நிவாரணத்தை நம்பியே தங்களுடைய வாழ்க்கை ஓடுவதாகவும் தற்போது நெல் அறுவடைக் காலம் ஆனபடியால் கூலி வேலைக்குச் செல்ல முடிகின்றது என்வும் முகாமில் வசிப்பவர்கள் கூறினார்கள். எங்களுடைய வீடுகளுக்கு நாங்கள் செல்லத் தயாராகவே உள்ளோம். ஆனால் இராணுவம் செல்ல அனு மதிக்கவில்லை. என்பதே இவர்களுடைய குற்றச்சாட்டாகும்.

# கடற்றொழில் துறையை மீளக்கட்டியெழுப்ப அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை

-யாழ்.கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டின் கடற்றொழில் துறையை மீளக்கட்டியெழுப்புவதற்கு சிறிலங்கா அரசு எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லையென யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது.**

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களை மோசமாகத் தாக்கிய ஆழிப்பேரலையால் பல்லாயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் உயிர், உடமை இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

அத்துடன் கடற்றொழில் உடமைகள், கடலினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இந் நிலையில் குடாநாட்டு மீனவர்கள் இன்னமும் தமது தொழில் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவில்லை. இதற்கு கடற்றொழில் உபகரணங்கள் இல்லாமை பெரும் பிரச்சினையாக உள்ளது.

எனினும் இதனைக் கருத்தில் கொண்டு உரிய உபகரண வசதிகளினை பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு வ்ழங்கி அவர்களின் தொழில் நடவடிக்கைகளை மீளக்கட்டியெழுப்ப அரசு முன்வராமையை சுட்டிக்காட்டியே இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சுனாமி ஆழிப் பேரலையின் தாக்கங்கள் காரணமாக யாழ். குடாநாட்டில் உள்ள 14 மீன்பிடி வலயங்களில் 9 மீன்பிடி வலயங்கள் முற்றாக அழிந்து சேதமடைந்து போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக யாழ்.குடாநாட்டின் மீன்பிடித்துறை பாரியளவு பின்னடைவுகளைச் சந்தித்திருப்பதால் கடற்றொழிலாளர்களது பொருளாதார நிலைமைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

எனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டின் கடற்றொழில் துறையை மேம்படுத்த நவீன மயப்படுத்தப்பட்ட கடற்றொழில் துறைகள் யாழ்.குடாநாட்டில் அமுல் செய்யப்படுவது அவசியம் எனவும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சுனாமிப்பேரலையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கவென பலகோடி ரூபாய்களை வெளிநாடுகளிடமிருந்து சிறிலங்கா அரசு அன்பளிப்பாகப் பெற்றுள்ள தெரிந்ததே. (33)

### ஒரு இலட்சம் ரூபா அன்பளிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சுனாமி அனர்த்தத்தின் 31 ஆம் நாள் நினைவை முன்னிட்டு அன்றைய தினம் தியாகி பொன் சிவகுமாரின் சகோதரரான லண்டனில் வசிக்கும் உரும்பிராயைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவதாசன் என்பவரால் ஒரு இலட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்படடுள்ளது.(சு)

## —சுனாமியால் இடம்பெயர்ந்த— மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் துரிதம்

—யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் இடம் பெயர்ந்த யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசத்தவர்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் சுனாமி அனர்த்தங்களால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த 37 அகதி முகாம்களில் 20 அகதி முகாம்களில் தங்கியிருந்த மக்கள் மீளக் குடியமரத்திரும்பியிருப்பதாகவும் இன்னமும் 17 அகதி முகாம்களில் மட்டுமே இடம் பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் தங்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள யாழ். அரச அதிபர் கணேஷ்.

இவ்வாறு ஏனைய 17 அகதி முகாம்களில் தங்கியுள்ளோரையும் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (33)

## மீனவர் பாஸ் எடுக்க வேண்டும் படையினர் மீண்டும் நிர்ப்பந்தம்

(வடமராட்சி)

மீண்டும் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் கரையோரப் பகுதிகளில் காவலரண்களில் கடமையிலிருக்கும் படையினரிடம் புதிய பாஸ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென படைத்தரப்பு தீர்ப்பளித்துவருவதாக மீனவ சங்கங்கள் குற்றஞ் சாட்டுகின்றன.

கடற்கொந்தளிப்பால் காவலரண்களும் மூழ்கடிக்கப்பட்டு விட்டதால் அங்கு வைக்கப்பட்டிருந்த படையினரால் வழங்கப்பட்டிருந்த மீன்பிடி பாஸ்துண்டுகளும், அதற்கான பதிவுகளும் கடலினுள் போய்விட்டதாகப் படைத்தரப்பு மீனவ சங்கங்களிற்கு அறிவித்துள்ளது. (27)

## குடத்தனை நலன்புரி நிலைய மாணவர்கள் கற்பித்தல் செயற்பாடின்றி பாதிப்பு

சுனாமி பேரலையால் இடம் பெயர்ந்த மணற்காட்டு மக்கள் குடத்தனை பாடசாலை நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளனர். இவர்களில் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இங்கு தங்கியுள்ள குடும்பங்கள் 78, அங்கத்தவர்கள் எண்ணிக்கை 244 ஆகும்.

இவர்களில் அறுபத்தெட்டு மாணவர்களும், 17 முன்பள்ளி சிறார்களும் அடங்குவர்.

இம் மாணவர்கள் குறைந்தளவு வசதிகளுடனேயே வாழ்ந்து வருகின்றமையால் இவர்கள் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் இன்மையால் பெரிதும் கவலைக்குரிய நிலைமையில் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் 68 மாணவர்களில் 24 மாணவர்கள் (O/L) க.பொ.த.சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களாகும். எனவே தமது கல்வியைச் சீரான முறையில் தொடர கல்வி உபகரணங்கள் யாவும் தேவைப்படுகின்றன. தமது கல்வி உபகரணங்கள் யாவும் கடல் அலை அடித்துச் சென்றுவிட்டன. எனவே எமது கல்வியை மேம்படுத்த தொண்டர் நிறுவனங்கள் முன்வர வேண்டும். என மிகவும் கவலையுடன் தெரிவித்தனர்.

தற்போது குடத்தனை பாடசாலை நலன்புரி நிலைய மக்களை உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்ற முடியாததினால் இப் பாடசாலை நிரந்தர மாணவர்களும் கல்வியைத் தொடர முடியாத நிலை உள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு இப் பாடசாலை வளாகத்திலேயே தற்காலிக தறப்பால் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் நிரந்தர மாணவர்கள் 200 பேருடன், இடம் பெயர்ந்துள்ள மாணவர்கள் 68 பேருக்கும் மொத்தம் 268 பேருக்கான வசதிகள் மிகக் குறைவே.

இங்கு இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் இருவரும் அடங்குவர். இதனால் இங்கு முன்பள்ளி சிறார்களுக்கு மர நிழலில் மணற்காடு றோ.க பாடசாலை ஆசிரியை நாளாந்தம் கற்பித்தல் செயற்பாட்டை நடத்தி வருகிறார். இவர்களுக்கு பின்னூட்டமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கா)

## சுனாமிக்கான சர்வதேச உதவிகள் எவையும் வடக்கு கிழக்கு மக்களைச் சென்றடையவில்லை

-மீனவ சங்கப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் தெரிவிப்பு

(வடமராட்சி)

சர்வதேச சமூகத்தினால் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சிறிலங்கா அரசாங்கத்திடம் வழங்கப்பட்ட உதவிகள் எவையும் கடுமையான பாதிப்பைச் சந்தித்துள்ள வடக்கு கிழக்குப் பகுதிகளுக்குக் கிட்டவில்லை என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டே அவ் உதவிகளை தென் பகுதிக்கு ஒதுக்கி வருவதுடன் நிதி துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டு வருகிறது என்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் யாழ். அலுவலகத்திற்கு விஜயம் செய்த அவர் சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மீனவ சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்தார். இச் சந்திப்பின் போதே அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை தெரிவித்தனர். இதன் போது கடற்புலிகளின் துணைத் தளபதி க.செழியன் மற்றும் மீனவ சங்கங்களின் மேலாளர் ப.மோகனும் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிலையில் மீனவ சங்கப் பிரதிநிதிகளது குற்றச் சாட்டிற்குப் பதிலளித்த பணிப்பாளர் நாயகம் ஜி.பியசேன சுனாமி கடற்கொந்தளிப்பினால் குடாநாட்டின் வடமராட்சி கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பான முழு விபரங்களும் ஏற்கனவே தமக்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக கூறியதுடன் தம்து அரசு வடக்கு-தெற்கு என்ற எந்தவொரு பாகுபாடுமின்றி பாதிக்கப்பட்ட மக்களிற்கான உதவிகளை சரி சமமாகப் பகிர்ந்தளிக்குமென உறுதியளித்தார்.

இதேவேளை 1983 முதல் 2001ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி வரை இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட குடாநாட்டு மீனவர்களிற்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்க தற்போது துரித நடவடிக்கைகள் முனனெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந் நஷ்ட ஈடுகளைக் கொடுப்பதற்கான அரசினது அங்கீகாரம் கிடைக்கப் பெற்று விட்டதாகவும் யாழ். அரச அதிபருடாக இக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் இந் நஷ்டஈட்டு கொடுப்பனவுகளை உரிய முறையில் வழங்குவதை மேற்பார்வை செய்ய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அக் குழுவிற்கு நான்கு செயலாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

இச் சந்திப்பின் பின்னர் சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடமராட்சியின் கரையோரப் பகுதிகளை அவர் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.(27)

### சிறப்பு விருதுகள் வழங்கல்

இன்போமேற்றிக்ஸ் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று அதிகூடிய புள்ளியைப் பெற்ற மாணவிக்கு தங்கப்பதக்கமும். சிறப்புச்சித்தியெய்திய மாணவர்களுக்கு சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளது. தங்கப் பதக்கம் பெறும் மாணவி: செல்வி.சுபாஜினி இராஜதுரை, சிறப்பு விருதுகளைப் பெற இருக்கும் மாணவர்கள்: செல்வி. உமா யோகநாதன், செல்வி.தர்சினி வைரமுத்து, செல்வன். சூரியகுமார் பொன்னையா குருசங்கர், செல்வன்.சந்திரமோகன் ஜெயராம், செல்வி.அச்சுதா சாம்பசிவமூர்த்தி, செல்வி. நிந்துஜா தர்மகீர்த்தி.

வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி ஜீபிலி மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

## பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 10 கிராம மக்கள் போராட்டம் நடத்த முடிவு

(தென்மராட்சி)


தென்மராட்சியில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பத்து கிராமங்களைச் சேர்ந்த மக்கள் யாழ்.அரசாங்க அதிபர் செயலகம் முன்னால் வரும் 10ஆம் திகதி மாபெரும் மக்கள் போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்கி படைகளை விலக்கி மக்கள் மீளக்குடியமர அனுமதித்தல், தடைசெய்யப்பட்ட விவசாய நிலங்களை விவசாயிகளிடம் ஒப்படைத்தல், மீன்பிடிக்கத்தடை செய்யப்பட்டபகுதிகளின் தடைகளை நீக்கி மீன்பிடிக்க அனுமதித்தல், தடைசெய்யப்பட்ட பாதைகளை மக்கள் பாவனைக்கு விடுதல், படையினர் நிலை கொண்டுள்ள பாடசாலை கள், வழிபாட்டுத்தலங்களை விட்டு படையினர் வெளியேறுதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடாத்தப்படவுள்ளது.

அரசினால் கடந்த ஆண்டு துரித அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் மேலும் இப்பிரதேசங்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்தும் , இப்பிரதேசங்களில் பெண்கள் சிறிலங்காப்படைகளால் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டித்தும் இந்த மாபெரும் மக்கள் போராட்டம் வரும் பத்தாம் திகதி யாழ். அரசாங்க செயலகம் முன்னால் நடைபெற இருக்கிறது. அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் கிராம பொதுமக்கள் ஒன்றியம் என்பன ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாகத் தெரியவருகின்றது. கைதடி , நாவற்குழி, வேலம்பிராய், தச்சன்தோப்பு, வீரபத்திரர்கோயிலடி, நாவற்குழி தெற்கு, சரஸ்வதி கிராமம், நாவற்குழி 300 வீட்டுத் திட்டம், மறவன்புலோ போன்ற கிராம மக்களே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தெரியவருகிறது. இதற்கான ஒழுங்கமைப்புகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (28)

**ஆழிப்பேரலைகள் முல்லைத்தீவை தாக்கிய சம நேரத்தில் மீட்பு வேலைகளை செய்து கொண்டிருந்தகடற்படைப் போராளியின் அனுபவத்தை இன்றும் தருகிறோம்**

பகுதி 12



கடற் புலி நடுக்கத்தால் எழுந்த பேரலைகள் முல்லைத்தீவைத் தாக்கிய வேளை கடற்கரைக்கு அண்மையில் இருந்த தமிழீழ கடற்படை அரசியல் அலுவலகத்தில் இருந்து உயிர்தப்பிய அதேவேளை அலையுடன் அடிபட்டுப்போய்க்கொண்டிருந்த பலரை மீட்டு உயிர்காத்த தமிழீழ கடற்படை அரசியல் போராளி அரவிந்தன் தான் நேரில் பார்த்தவற்றையும் தனது மீட்பு அனுபவத்தையும் இன்றும் பகிர்ந்துகொள்கிறார்.




# ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

நானும் என்னுடன் நின்ற நான்கு பேரும் தான் தனியாக வண்ணாங்குளம் ஆர்.டி.எ சந்தியில் நின்றோம். முதல் தடவை அலை அடிப்பதற்கு முன்னர் எப்படி சத்தம் கேட்டதோஅதேபோலத்தான் இரண்டாவது தடவையும் பெரும் வெடியோசை கேட்டது. அதன்பிறகு கடல் கருமை நிறமாக வானை நோக்கி எழும்பியது. கடற்கரையில் நின்ற மரங்கள் எதுவுமே தெரியவில்லை எல்லாமே கடல்ாகத்தான் இருந்தது.. இதைப்பார்த்த உடனேயே அந்தப்பகுதியில் கிடந்த காயக்காரரில் சிலரை தூக்கிக் கொண்டு மாவீரர் மண்டபம் இருந்த இடம் நோக்கி ஓடிக்கொண்டிருந்தோம். ஒரு கட்டத்தில் ஓட முடியாமல் போய்விட்டது. ஓரளவு தண்ணீருக்குள்ளாலாவது ஓடலாம், ஆனால் இங்கு தண்ணீருக்குக்கீழ் கல்லுகளும், மரங்களும், தளபாடங்களும் அல் லவா இருக்கிறது. அதற்குள் எப்படி காலை வைத்து ஓடுவது, நாங்கள் தோளில் சுமந்து வருகின்ற காயமடைந்தவரின் முனகல் ஒருபுறம். மறுபுறம் கடலில் இருந்து இரண்டாது அலை ஆவேசமாக துரத்திக் கொண்டிருந்தது. இந்த நிலையில் ஓடிப்போய் புட்டியைச் சேரவேண்டும்.காலை நிலத்தில் வைத்து ஓடமுடியாது. ஏதோ ஒருவாறு ஓடிவந்து விட்டோம். புட்டியை வந்த பிறகுதான் காலைப்பார்த்தேன் அது இரத்தத்தால் நனைந்து கிடந்தது.

அலை இங்கும் வரலாம் என்ற சந்தேகத்தில் மாவீரர் மண்டபத்தின் அருகில் நாங்கள் வைத்திருந்த காயக்காரரை அதில் நின்ற பெரும் ஆலமரத்தின் மேல் ஏற்றி விட்டோம். ஏற்றிவிட்டு கச்சேரிக்கு முன்னால் முள்ளியவளை நோக்கிப் போகின்ற பாதையடிக்குப் போய்ப் பார்த்தேன், நெஞ்சளவு தண்ணீர் வரும் வீதியை ஊடறுத்துப் பாய்ந்து கொண்டிருந்தது. அந்தத் தண்ணீருக்குள்ளாலும் தப்பியிருந்த மக்கள், கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து தங்கள் பிள்ளைகளையும் பெண்களையும் தோளில் சுமந்தவாறு மெல்லமெல்லமாக அடுத்த கரையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். இப்படி பலர் அடுத்தகரைக்குப்போய் சேர்ந்து விட்டனர். அதைப்பார்க்க பயங்கரமாகத்தான் இருந்தது. ஆனால் அதற்குள்ளாலும் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

இப்படித்தான் இந்தக்கரையில் நின்ற சிலர் தங்கள் பிள்ளைகளுடனும், மனைவி, சகோதரர்களுடனும் மறுகரைக்குப் போவதற்கு வெளிக்கிட தயாராகிக் கொண்டிருந்தனர். ஆனால் சின்னப்பிள்ளைகளும் பெண்களும் நெஞ்சளவு நீருக்குள்ளால் போவதற்குப் பயந்து அழுது கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் சிலர் " இதில போறவயள் போய்விட்டால் அடுத்ததாய் நாங்கள் போவம். அவருக்கு ஒரு பிரச்சினையும் இல்லை எண் டால் சரி" என்று ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தனர். ஒருவாறு முன்னால் போனவர்கள் மறுகரையை போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

இப்போது இந்தக்கரையில் இருந்து போவதற்குப் பயந்து கொண்டிருந்தவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து பதினைந்து பேரளவில் தங்கள் பிள்ளைகள், பெண்கள் என எல்லோரையும் தூக்கிக்கொண்டும், தாங்கிக் கொண்டும் மறுகரையைப் போய்ச் சேர்வதற்கான பயணத்தை ஆரம்பிக்கிறார்கள். ஏற்கனவே அலையில் சிக்கித்தப்பியவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் நன்றாக நனைந்திருந்ததுடன் சிறுசிறு காயங்களும் அவர்களின் உடலில் இருந்தன.

அவ்வாறு போய்க் கொண்டிருந்தவர்கள் 75 மீற்றர் தூரத்துக்குப்



போயிருக்க மாட்டார்கள். தண்ணீரின் மட்டம் சற்று அதிகரித்து விட்டது. அதற்குள்ளாலும் அவர்களின் பயணம் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. இப்படி இருக்க ஒரு பெரிய பனைமரம் அந்தத் தண்ணீருக்குள்ளால் மிக வேகமாக மிதந்து வந்துகொண்டிருந்தது. அப்படி மிதந்து வந்த பனைமரம் இவ்வாறு போய்க் கொண்டிருந்த அனைவரையும் மோதித்தள்ளிக் கொண்டு போய்விட்டது. இதனால் அவர்கள் நீரில் தத்தளித்தவாறு தண்ணீருடன் அடிபட்டுப் போய்கொண்டிருந்தார்கள்.

இந்தக்காட்சி இதயடித்துடிப்பையே நிறுத்தி விட்டதுபோல் இருந்தது



பரிதாபமான சம்பவம் அந்த அலையின் குமுறலுக்குள் இருந்து தப்பிய வர்களை இந்தச் சிறு தண்ணீருக்குள் பனை அடித்துக் கொண்டு போய் விட்டது என் கண்ணை நம்பவே முடியவில்லை. அப்படியான மோசமான காட்சி. இரண்டாவது அலையுடன் தான் அந்தப்பனை இப்படி வேகமாக வந்திருக்கவேணும்.

இந்தச் சம்பவத் துக்குப்பிறகு ஒருத் தரும் அதாலபோகவே இல்லை. இதைப் பார்த்து விட்டு நாங்கள் கடற்கரைப் பக்கமாகப் போனோம். பனை, தென்னை, மரங்கள் எதுவுமே தெரிய வில்லை. அந்தளவுக்கு கடல் உயர்ந்திருந்தது. சிறிது நேரத்தில் கடல் வற்றிக் கொண்டு போக ஆரம்பித்து விட்டது. அதன்பிறகு வீட்டுக் கூரைகளுக்குள்ளும் மலசல கூடங்களுக் குள்ளும் செருகுப் பட்ட நிலையில் சடலங்கள் கிடந்தன. முட கம்பிகளிலும்,

பனைமரங்களிலும் வேலிகளிலும் பெண்கள் தலை முடி சிக்கிய நிலையில் கிடந்தார்கள். அவர்களில் பலர் இதனால் தான் இறந்திருக்கவேணும். கள்ளப்பாடு வண்ணாங்குளம பகுதிகளில் தான் இப்படிப்பலர் இறந்திருந்தனர். சிறுவர்களின் சடலங்களை நான் பெரிதாகக் காணவே இல்லை. அவர்கள் அலையுடன் அடிபட்டுப் போய்விட்டார்கள் போல கிடந்தது.

இரண்டாவது அலையும் குமுறி அடித்த பிறகு உயிருக்ககப் போரடிக் கொண்டிருந்தவர்களை பெரிதாக காணவில்லை அதிகமானவர்கள் உயிரற்ற சடலங்களாகவே கிடந்தார்கள்

கடற்கரையில் இருந்த சேச்சின் மரத்தூண்கள் எல்லாம் ஆர்.டி.எ சந்தியில் வந்து கிடந்தன. **இந்த நிலையில் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் கடற்படை சிறப்புத் தளபதி சூசை அண்ணாக்கள் எல்லோரும் வந்து விட்டார்கள்.** இப்படியே 300 இற்கும் அதிகமான காயக்காறரை முதல் நாள் மீட்டு அனுப்பி விட்டோம்.

முதல் அலை அடித்ததன் பின்னர் நாங்கள் பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து கடற் கரை பக்கமாக உயிருக்காகப் போராடிக்கொண்டிருப்பவர்களை மீட்பதற்காக சென்ற போது ஒரு பெரிய பஸ் அலையுடன் அடிபட்டுப் போய் ஒரு கட்டடத்துடன் செரு குப்பட்டுக் கிடந்தது. நாங்கள் வெளியால் நின்று பார்த்த போது பஸ்சுக்குள் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. கண்ணாடிகள் எல்லாம் உடைந்து போய் கஞ்சல்கள் மூடியிருந்தது. பஸ்சிற்குள் கஞ்சல்கள் தான் தெரிந்தது. எப்படியும் அதற்குள் யாராவது இருப்பார்கள் என்று நினைத்து அதனுள் ஏறிப்பார்த்தேன் அதற்குள் காத்திருந்தன பயங்கரமான காட்சிகள். பாவம் பதினைந்துக்கும் அதிகமானோரின் சடலங்கள் நெளிந்தும் வளைந்தும் இருக்கைகளின் கீழ் செருகுப்பட்டும் கிடந்தன. அவர்களில் யாருக்காவது உயிர் இருக்கிறதா என்று பார்த்தேன் எவருக்கும் உயிர் இல்லை எல்லோரும் இறந்து தான் கிடந்தனர்.

இரண்டாவது நாள் மீட்புப் பணியின் போது கடற்கரைக்கு பக்கத்தில் உள்ள மேல்மாடி வீட்டுக்கு முன்னால் ஒரு படகு கவுண்டு போய் இருந்தது. அந்தப் படகை நிமித்தினோம் நிமிர்த்தி விட்டுப் பார்த்தால் ஒரு பெரிய பள்ளம் இருந்தது. அந்தப் பள்ளத்தில் கொங்கிறீற் தூண் ஒன்றின் கீழ் ஒரு அம்மாவின் சடலம் இருந்தது. அந்தத் தூணை பெரும் சிரமப்பட்டு அகற்றி விட்டோம். அதன் பிறகு அம்மாவின் சடலத்தை வெளியில் எடுத்தோம். அந்த அம்மா தனது குழந்தையை இறுக அணைத்தபடி கிடந்தார். அந்தக் காட்சி அனைவரது நெஞ்சையும் உருகவைத்திருக்க வேண்டும். ஏனெனில் சிலநிமிடங்கள் நாங்கள் அனைவருமே திகைத்துப் போய் இருந்தோம். இப்படி இன்னுமொரு சம்பவம் கள்ளப்பாட்டில் நாங்கள் சடலங்களை எடுத்துக்கொண்டிருந்த பொழுது ஒரு பற்றையாக இருக்க வேண்டும். அதனுள் ஒரு தாயும் பிள்ளையும் நுளம்பு வலைக்குள் சிக்குப் பட்டவாறு சடலமாகக் கிடந்தனர். அந்தக் காட்சியும் எங்களைக் கலங்க வைத்தது. நான் நினைக்கிறேன் தாயும் பிள்ளையும் நுளம்பு வலைக்குள் கிடந்திருக்க வேணும். அப்போது அலை அடிச்சு அவர்களை அப்படி சுருட்டி விட்டது. அந்தக் காட்சியைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

**அ.லோகீசன்**

மொத்தத்தில் எல்லாச் சம்பவங்களும் மோசமானவையாகத் தான் இருந்தன. என்னால் எதையுமே நம்ப முடியவில்லை. நான் சிலவேளை கனவு தான் காண்கின்றேனோ? என்று நினைத்து என்னை ஒரு முறை தட்டிப்பார்த்தேன். ஆனால் கனவல்ல அது நிஜமாகவே தான் இருந்த்து என்று தான் கண்ட காட்சிகளை தன்னால் கூட நம்பமுடியவில்லை. இப்படியெல்லாம் நடந்து விட்டது என்று தான் கண்ட, அனுபவித்த துயர வலியின் சிலபகுதிகளை ஒவ்வொன்றாக சொல்லி முடித்தான் அந்தக் கடற்படைப் போராளி.

அடுத்தடுத்து அலை அடித்துக்கொண்டிருந்த பொழுதும் அதில் அடிபட்டு மூழ்கி மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்த ஓரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரை இந்தப்போராளி மீட்டிருந்தார் என பகுதி - 11 இல் தந்திருந்தோம். அவர்களின் பயங்கர அனுபவம் என்ன எவ்வாறு அவர்கள் காப்பற்றப்பட்டார்கள் என்பன பற்றி அறிவதற்காக அவர்களை சந்தித்தோம்.தாம் காப்பற்றப்பட்டமை பற்றி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அடுத்த பகுதியில் உங்களுக்காக தருகிறோம். (தொடரும்)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## விடாமுயற்சி வெற்றி கண்டது



அவுஸ்திரேலியாவின் பெருமைக் குரிய போட்டியாக விளங்கும் அவுஸ் திரேலிய ஓபன் டென்னிஸ் தனது நூற் றாண்டு போட்டியை நிறைவு செய்துள்ளது.

உலகின் முன்னணி வீர,வீராங் கனைகள் கலந்துகொண்ட இப்போட்டியில் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை ரஷ்யாவின் மராட்சபினும், மகளிர் ஒற்றையர் பட்டத்தை அமெரிக்காவின் செரீனா வில்லியம்சும் கைப்பற்றினர்.

பரபரப்புக்கு பஞ்சமில்லாதவாறு நடைபெற்ற இப்போட்டித் தொடரில் உல கின் முதல் நிலை வீரர் ரோஜர் பெரடரின் தோல்வி முக்கிய திருப்பு முனையாகும். அவரது டென்னிஸ் வாழ்க்கையில்



26 போட்டிகளில் தொடர்ச்சியான வெற்றி களைப் பெற்றதுடன் அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வெல்லும் கனவுடன் அரை யிறுதி வரை முன்னேறிய கனவும் தகர்ந்து போனது.

அரையிறுதியில் மராட்சபினை வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறி விடலாம் என்று அவர் நிச்சயம் நினைத்திருப்பார். ஆனால் சபினின் ஆட் டம் அவரை வியப்பில் ஆழ்த்தியதுடன் வரலாற்று தோல்வி ஒன்றையும் சந்திக்க நேர்ந்தது. இதற்காக சபின் 4 மணி 20 நிமிடங்கள் பெரடருடன் போராடினார்.

லெயிட்டன் ஹெவிட், அன்டிரொடிக், மராட்சபின் போன்ற வீரர்களுடன் ஆடும் போது எச்சரிக்கையுடன் ஆடுவதாக கூறும் பெரடர் ஹெவிட்டுடன் ஆடும் போதே அதிக எச்சரிக்கையுடன் ஆடுவதாகவும் தெரிவிக் கின்றார். அவர் சபினை எளிதாக நினைத் தாரோ?

வல்லவனுக்கு வல்லவன் வையகத் தில் உண்டு என்பதை நிரூபித்துள்ள சபின் பெரடரின் தோல்வியின் பக்கத்தை திறந்து வைத்துள்ளார் என்று கூறினாலும் மிகையில்லை.

அடுத்து செரீனா தனது இழந்த பெருமையை பெறுவதற்கு இப்போட்டியை கச்சிதமாகப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் லெயிட்டன் ஹெவிட் சொந்தமண்ணில் வெற்றிக்கொடி நாட்டலாம் என கனவு கண்டதுடன் இதற் காகக் கடும் பயிற்சியிலும் ஈடுபட்டார். இறு திப் போட்டி வரை முன்னேறினார். பட்டம் வெல்ல முடியவில்லை. உலகின் முதல் நிலை வீரரை வீழ்த்திய சபினிடம் மண்டியிட்டார்.

## இருதுறை வீரர்கள்....



விளையாட்டு வீரர் ஒருவர் சர்வ தேச ரீதியில் இரண்டு விளை யாட்டுத் துறைகளில் முன்னணி வகிப்பது சிறப்பான அம்சமாகும். அதற்குக் காரணம் இவ் வாறான வீரர்கள் நீண்ட நாட்களின் பின்னர் தமது திறனை வெளிப்படுத்து வதாகும்.

அந்த வரிசை யில் நியூசிலாந் தைச் சேர்ந்த ஜெப் வில்சன் என்பவர் பெருமையடைகின்றார். அவர் கிரிக்கெட் ஆட்டத்தில் மட்டுமன்றி றக்பி விளையாட்டிலும் நியூசிலாந்து அணியை பிரதி நிதித்துவப் படுத்துகின்றார்.

1973ஆம் ஆண் டில் பிறந்த இவர், தனது பாடசாலை வாழ்க்கையிலேயே இவ்விரு விளையாட்டுக் களிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். எனினும் அவர் கிரிக்கெட் ஆட்டத்துக்கே முக்கியத்துவம் கொடுத்தார். அதனால் அவருக்கு 1993ஆம் ஆண்டு பாடசாலைக் கல்வியை முடித்தவுடனேயே தேசிய அணியில் இணைய வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவரின் வயது 19ஐ தாண்டியிருந்தது.

அவருக்கு முதலில் ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதுவும் அண்டை நாடான அவுஸ்திரேலிய அணியுடன் ஆடும் போட்டியாகவும் அமைந்தது. அத்தொடரில் ஹமில்டனில் நடைபெற்ற போட்டியில் அவர் 28 பந்துகளில் ஆட்டமிழக்காது பெற்ற 44 ஓட்டங் கள் நியூசிலாந்து அணிக்கு வெற் றியைத் தேடித்தந்தது. சகலதுறை வீரரான அவர் பங்கேற்ற இறுதித் தொடர் ஒன்றில் 80 ஓட்டங்களைப் பெற்றதுடன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

இதற்கிடையில் ஒல்ட்பிளக்ஸ் றக்பி அணிக்காக அவர் விளையாடும் வாய்ப்பைப் பெற்றார். அதன் பின்னரே அவர் கிரிக்கெட் உலகிலிருந்து விடைபெற்றார். றக்பி அணியில் அவர் ( Full pack) புல் பேக், (Wing) விங் என்ற சிறப்புப் பெயருடன் ஆட்டங்களில் பங்கேற்றார். அவர் பங்கேற்ற முதல் போட்டியிலேயே நியூசிலாந்து றக்பி அணி வெற்றி வாகை சூடியது.

1995ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண றக்பி போட்டியில் நியூசிலாந்து கிண்ணத்தைக் கைப்பற்ற இவர் பங்களிப்பு செய்தார். அப்போது அவர் Full pack வரிசையில் ஆடினார். அப்போது லோமு என்ற வீரர் லிங் 3 என்ற வரிசையில் ஆடினார். 1993ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டுவரை அவர் பங்கேற்ற 60 றக்பி போட்டிகளில் 44இல் நியூசிலாந்து வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.2002ஆம் ஆண்டு லோமு நோய்வாய்ப்பட்டதும் இவரும் றக்பி அணியிலிருந்து நீங்கினார். அது அவ்வணிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இவரது வெளியேற்றம் பற்றி றக்பி சம்மேளனத்தலைவர் குறிப்பிடும் போது நியு ,சிலாந்து றக்பி அணிக்கு பெரும் இழப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.



எனினும் இவர் 2002 ஆம் ஆண்டு மீண்டும் கிரிக கெட்டில் இணைந்தார். சகலதுறை வீரரான இவ ரின் வருகை யுடன் நியூ சிலாந்து கிரிக் கெட் அணி யின் கரம் ஓங் கியது. இவர் மீண்டும் கிரிக் கெட் உலகில் காலடி வைப்பது பெரும் வியப்பில் ஆழ்த்தியதாக தெரிவுக்குழுத் தலைவர் றிச்சட் ஹாட்லி தெரிவித்தார். அந்தவகையில் இவர் அண்மையில் சுனாமி நலநிதி சேகரிப்புக்காக உலக லெவன் அணியுடன் மோதும் நியூசிலாந்து அணியில் இடம்பிடித்துள்ளார். அதன் மூலம் அவர் மீண்டும் கிரிக்கெட் உலகில் பிரவேசிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இவரது வருகையினால் மெளரி இனத்த வர்களான அன்ரு அடம்ஸ் தமாகனிங் ஆகியோர் அதிருப்தியை வெளிப்படுத்தியிருப்பதாகவும் தெரிய வருகிறது. அவர் நுட்பம் குறைந்தவர் என தமாகனிங் தெரிவித்துள்ளார். எனினும் அவரது பந்து வீச்சு அண்மையில் நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் சிறப் பாகவே காணப்பட்டது.

வடிவேல்

## தலைமை நீடிக்குமா?



ஒரு அணியின் வெற்றியோ, தோல்வியோ அன்றி சாதக பாதகங்களோ விளையாட்டு உலகைப் பொறுத்தவரையில் அணித் தலை வர், பயிற்சியாளர், வீரர்கள் என்ற வரிசையில் ஆதிக்கம் செலுத்துகின்றது.

இந்த வகையில் தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் பிரச்சினைக்குரிய அணித் தலைவராக மாறியுள்ளார். எந்த நேரத்திலும் அவரது தலைமைப் பதவி பறிக்கப்படலாம்.

அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் ஏற் பட்ட படுமோசமான தோல்விக்கு ஒட்டு மொத்தமாக அவரை பலிக்கடாவாக்கி விட்டனர். தற்போது அவரது அணித் தலைவர் பதவி கத்தி மேல் நடப் பது போன்றதாகவே உள் ளது.

வெற்றியோ தோல்வியோ களத்தில் நிற்கும்போது எந்தவித உணர்ச் சியையும் காட்டாத மிகவும் அமைதியான சுபாவம் கொண்ட இன்சமாமுக்கு அதுவே பிரதான எதிர்ப்பலையாக அமைந்துவிட்டது.

இப்படியான அசமந்தமான அணித் தலை வர் எதற்கு? அவரைத் தூக்கி எறிந்துவிட்டு இளமைத் துடிப்பான ஒருவரை நியமிக்க வேண்டும் எனப் பலரும் குரல் எழுப்பிவிட்டனர்.

இதில் முன்னாள் அணித் தலைவர் இம்ரான்கானும் மிஞ்சவில்லை. இந்த நிலை யில், இன்சமாம் அணியில் சாதாரண ஒருவ ராக விளையாடுவதிலேயே சங்கடமான நிலை உருவாகியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி குழப்பகர மான அணி என்பது கிரிக்கெட்டைத் தெரிந்தவர் களுக்குக் கூற வேண்டிய அவசியம் இல்லை.

அவ் அணியில் நிர்வாகத்துக்குள் பிரச் சினை, பயிற்சியாளர்களுக்குள் பிரச்சினை, வீரர்களிடையே ஒற்றுமையின்மை என்பன தொடர்ந்து நீடித்து வரும் ஒன்றே.

இதனை இல்லாது செய்து அணியை நல்ல முறையில் வழி நடத்துவார் என்ற வகையிலேயே இன்சமாம் உல்-ஹக் அணி தலைவராக நியமிக்கப்பட்டதுடன் அவரின் கீழ் புதிய இளம் வீரர்களும் உள்வாங் கப்பட்டனர். இது அனை வராலும் வரவேற்கவும்பட்டது.

இந்த நிலையில்; பாகிஸ் தான் ரசிகர்கள் வேதாளம் மீண் டும் முருங்கை மரத்தில் ஏறிய கதை போன்று கொடும்பாவி எரிப்பதி லும், வீரர்களின் வீடுகளைத் தாக்குவதிலும் இறங்கிவிட்டனர்.

காலத்திற்குக் காலம் இது போன்ற சம் பவங்கள் நடைபெறுவதும் பின்னர் அணி சில வெற்றிகளைப் பெறும்போது தணிவதும் வழமையானதே.

பாகிஸ்தான் ரசிகர்கள் இன்றும் தோல்வி களை ஜீரணிக்க முடியாதவர்களாக இருப்பது வேதனைக்குரியதே.

அவுஸ்திரேலிய சுற்றுப் பயணம் என்பது எந்த அணிக்குமே கடினமான விடயம். அதனை ரசிகர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவுஸ்திரேலியா உலகின் மிகச் சிறந்த அணி என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தற்போது பாகிஸ்தான் அணி அவுஸ் திரேலியா, மேற்கிந்தியத்தீவுகளுடனான மும்முனை ஒரு நாள் போட்டியில் விளையாடி வருகிறது. இதில் இரண்டு போட்டிகளில் அசத்தலான வெற்றியைப் பெற்றுள்ளது.



பாகிஸ்தான் ஒரு போட் டியில் மேற்கிந்தியத் தீவை யும், ஒரு போட்டியில் அவுஸ்தி ரேலியாவையும் தோற் கடித்துள்ளது. இந்த நிலை யில், பாகிஸ்தான் அணி ஒருவாறு இறுதிப் போட்டி வாய்ப்பைப் பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினால் இன்சமாமின் த(லை)மை தப்புமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# வரலாற்றிலோர் மலராகிய 7ஆம் ஆண்டு நினைவுகளில்

தாயின் மடியில்
13
05
1975



தாயக மடியில்
01
02
1998

## லெப். கார்த்தீபன்

பொன்னுச்சாமி விக்னேஸ்வரன்

(கைதடி கிழக்கு-கைதடி)

அன்பு நிறைந்தவனே! ஆருயிராய் இருந்தவனே!
புன்னகை மொழி பேசும் பூவே!—என்றும் எம்
நெஞ்சினிலே உன் நினைவிருக்கும்—அந்த
நினைவினிலே உன் முகம் இருக்கும்

ஆசை மாமா குடும்பத்தினர்,
முகமாலை வடக்கு,பளை

த.மு:-சங்கத்தார் வயல்
இயக்கச்சி.

(5818)

# எங்கள் நெஞ்சை விட்டகலா
# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்
22
06
1963



விண்ணுலகில்
01
02
1998

மாவீரர்

## மேஜர் நடராசா கமலநாதன்

### ஆசிரியர் (கமல் மாஸ்ரர்) இறையவன்

அரியாலை, யாழ்ப்பாணம்

கிளிநொச்சி முற்றுகைச் சமரின் போது வீரச்சாவு

நெஞ்சம் மறப்பதில்லை அது நினைவை இழப்பதில்லை ஊனோடும் உயிரோடும் கலந்து விட்ட எங்கள் தலை மகனே கமலநாதா! அன்பின் சிகரமாய் பலரும் போற்றும் பண்பாள னாய் பிறர் நலன் பேணும் சிந்தனையாளனாய் பாசத்தின் உறைவிடமாய் வையகந் தன்னில் வாழ்வாங்கு வாழ்ந்து இளஞ் சிறார்க்கு கல்வி புகட்டிய ஆசிரிய திலகமே எதிர் காலச் சமூதாயத்துக்காகப் பாடுபட்டு உழைத்த வீர மறவனே மாவீரனே ஏழு ஆண்டென்ன ஏழாயிரம் ஆண்டுகள் உருண் டோடினாலும் உங்களை நாங்கள் மறக்க முடியுமா. மறக்க முடியவில்லை தினம் தினம் அழுது புலம்புகின்றோம். பெற்றவயிறுகள் பற்றி எரியுதடா வீரனே உன்னைப் போன்ற இந்த மண்ணுக்காக வித் திட்ட ஏனைய மாவீரர்கட்கும் எங்கள் குலதெய்வமாகிய உங்களையும் நினைந்து உருகிச் சொரியும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்தித்து தினம் தினம் வாடுகின்ற அன்பு உள்ளங்கள்.

உன்னை, ஈன்றெடுத்து வளர்த்து மாவீரனாக்கிய அம்மா, அப்பா, சகோதரர்கள், சகோ தரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் உன் உடன் பிறப்புக்களின் பிள்ளைச் செல்வங்களாகிய பெறாமக்கள், பெறாமகள்மார், மருமகள், மைத்துனிமார், மைத்துனர்கள்.

உரிமையாளர்:-
திரு.வ.நடராசா,
இளைப்பாறிய ஆசிரியர்,
தந்தையார், அரியாலை,
யாழ்ப்பாணம்.

(சி.11226)

# எஸ்.பி.பெப்ரவரி –4 இல் விடுதலை?

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க எதிர்வரும் 4ஆம் திகதி விடுதலை செய்யப்படுவார் என எதிர்பார்க் கப்படுகிறது. சிறிலங்காவின் சுதந்திர தினத்தை முன்னிட்டே இவர் விடுதலை செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின பேரில் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு இரண்டு வருட கடுழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சுனாமியின் பின்னர் நாட்டில் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்ற அடிப்ப டையில் நான்கு மகாநாயக்கர்கள் சனாதிபதியிடம் எஸ்.பி.திஸாநாயக் கவை விடுதலை செய்யுமாறு கோரியுள்ளதாக தெரியவந்துள்ளது.

## சுனாமியால் உயிரிழந்தோர்

சுனாமியால் முல்லைத்தீவில் வர்த் தகத் தொழிலில் ஈடுபட்டு உயிரி ழந்த குடும்பங்களுக்கான சிறிய உதவி வழங்குவதற்கு ஒரு லட்சம் ரூபா பணத்தினை நெதர்லாந்தில் வசிக்கும் க.கனகேஸ்வரி-முல்லைத் தீவு வர்த்தக சங்கப் பொருளாளர் இ.சந்திரமோகன் ஊடாக வழங்கி யுள்ளார். இப் பணம் வைப்பிலிடப் பட்ட வங்கிக் கணக்குப் புத்தகங் களை இறந்தவர்களின் பிள்ளை களுக்கு வழங்கினார். (20)

# பணிநிலை வேண்டுகை

யாழ்.சாலை கிளிநொச்சியில் அமைந்துள்ள எழுகதிர் பல்பொருள் விற்பனை நிலையம் [துனியார்] நிறுவனம் ஒன்றுக்கு கீழ்க் காணும் பணிநிலை வெற்றிடங்கள் வேண்டப்படுகின்றன.

01. கணக்காளர் வேண்டுகை.
02. விற்பனையாளர் வேண்டுகை.
03. களஞ்சியப் பணியாளர் வேண்டுகை.
04. களஞ்சிய உதவியாளர் வேண்டுகை.
05. நடமாடும் விற்பனையாளர் வேண்டுகை.
06. நடமாடும் விற்பனை உதவியாளர் வேண்டுகை.
07. சமையலாளர் வேண்டுகை.

குறிப்பு:-

அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேல் உள்ள பணிகளுக்கான தகைமை உடையவர்கள் உரிய கல்வித் தகைமைகளை 07.02.2005 (சனிக்கிழமைக்கு) முன்னதாக கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

முகவரி
எழுகதிர் பல்பொருள் விற்பனை நிலையம்,
ஈழநாதம் பணிமனை,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

(5619)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் – முல்லைத்தீவுக்கிளை

## பதவி வெற்றிடம்

**திட்ட இணைப்பாளர்**

இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவுக் கிளையினால், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படுகின்ற செஞ்சிலுவைச் சங்க சுகாதார சேவையில் சேவையாற்றுவதற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தகைமையுடையவர்கள் எதிர்வரும் 09.02.2005 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் தங்கள் விண்ணப்பங்களை தகைமைச் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளுடன் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## தகைமைகள்:-

01. க.பொ.த.(உ/த) பரீட்சையில்(விஞ்ஞானப்பிரிவு) மூன்று பாடங்களில் சித்தி,
02. ஆங்கிலம்/தமிழ் எழுத, பேச நன்கு தெரிந்திருத்தல் வேண்டும்.
03. சுயமாகத் திட்டங்கள் தயாரிக்கவும், செயற்படுத்தவும் தெரிந்திருத்தல் வேண்டும்.
04. இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.
05. வயதெல்லை 25-55 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
06. அடிப்படைக் கணினி அறிவு இருத்தல் வேண்டும்.
07. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
08. உறவினரல்லாத இருவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

வைத்தியகலாநிதி து.வி.ஜெயகுலராஜா,
கௌரவ தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
முல்லைத்தீவுக் கிளை,
புதுக்குடியிருப்பு.

(சி.11230)

# இந்தியாவில் இடதுசாரிக் கட்சிகள்

# அரசியல் நடவடிக்கைகளை அதிகரிக்க முடிவு

(புதுடில்லி)

லோக்சபாவில் 61 எம்.பிக்களைக் கொண்டுள்ள இடதுசாரிக் கட்சிகள், இந்தி பேசும் மாநிலங்கள் மற்றும் மேற்குப் பகுதி வட மாநிலங்களில் தங்களின் அரசியல் செல்வாக்கை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளன.

இந்தி பேசும் வடமாநிலங்களில் எங்களின் தளத்தை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளோம். அதே நேரத்தில் நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள ராஜஸ்தான், மகாராஷ்டிரா, கோவா ஆகிய மாநிலங்களிலும் கட்சி வளர்ச்சி குறித்து தீவிர கவனம் செலுத்த உள்ளோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் ஏ.பி பரதன் தெரிவித்தார்.

பீகாரில் லாலுவின் ராஷ்டிரிய ஜனதா தளத்துடன் தொகுதி உடன்பாடு வைத்துக் கொண்டு 14 சட்டசபைத் தொகுதிகளிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடுகிறது. அதேபோல் ஜார்க்கண்டில் 11 தொகுதிகளிலும், அரியானாவில் 10 தொகுதிகளிலும் இக் கட்சி போட்டியிடுகிறது. இந்த உடன்பாட்டினால் மத்தியில் கூட்டணி அரசுக்கு எவ்வித தர்மசங்கடமும் வருங்காலத்தில் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. அரசியலில் மன வருத்தங்கள் எளிதில் மறைந்து விடும்.

கடந்த ஆண்டு மே மாதம் நடந்த லோக்சபா தேர்தலின் மூலமே மத்திய அரசை ஆட்டிப் படைக்கும் சக்தி இடதுசாரி கட்சிகளுக்கு கிடைத்துள்ளது. இதனால் கம்யூனிச சித்தாந்தம் மீது மக்களுக்கு பொதுவாக இளைஞர்களுக்கு அதிகம் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. எங்கள் கட்சியில் தற்போது ஆறு லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். இளைஞர்களை எங்கள் பக்கம் இழுத்து மேலும் பல புதிய உறுப்பினர்களைச் சேர்க்க உள்ளோம். சண்டிகாரில் மார்ச் 29ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதி வரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு நடக்கிறது. இதில் நாடு முழுவதும் உள்ள 600 முக்கிய கட்சிப் பிரமுகர்கள் பங்கேற்க உள்ளனர். இது தவிர சீனா,யப்பான், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் கியூபா ஆகிய நாடுகளில் இருந்தும் 30 பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்கின்றனர். இந்த மாநாடு மூலமும் கட்சிக்கு பெரும் உற்சாகம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கோவா தலைமைச் செயலர் அந்தமானுக்கு மாற்றம்

(புதுடில்லி)

சுனாமி நிவாரணப் பணிகளுக்காக கோவா மாநில தலைமை செயலாளர் தேவ்சிங் நேகி அந்தமானுக்கு மாற்றப்பட்டார். கோவாவில் பா.ஜ ஆட்சி கவிழும் நிலையில் உள்ளது. தற்போது தலைமை செயலாளர் தேவ்சிங் நேகியை மத்திய அரசு மாற்றியுள்ளது. இது குறித்து அவர் கூறியதாவது:- சுனாமி நிவாரணப் பணிக்கு அந்தமான் செல்ல விருப்பமா என்று மத்திய அரசு கேட்டது. கடந்த வாரமே நான் அதற்கு ஒப்புதல் தெரிவித்தேன். அதை முதல்வரிடமும் கூறி இருக்கின்றேன் அவரும் என்னைப் பணியில் இருந்து விடுவிக்க சம்மதித்தார்.

எனது இடமாற்றத்திற்கும் தற்போது திடீரென மாநில அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் தொடர்பில்லை. என்னுடன் பயிற்சி பெற்ற கிரன் திங்ரா அடுத்த தலைமை செயலாளராக நியமிக்கப்படுவார் என்று என்னிடம் தெரிவிக்கப்பட்டது என்றார்.



ரூபா 480 கோடியில் 4 வழி லை, சுரங்கப்பாதை, மேம்பாலம் உட்பட ஏழு புதிய திட்டங்களுக் மதுரவாயலில் நடந்த விழாவில் தி.மு.க. தலைவர் கருணாநிதி அடிக்கல் நாட்டியபோது, அருகில் மத்திய அமைச்சர்கள் டி.ஆர். பாலு, தயாநிதி மாறன், கே. எச். முனியப்பா, ஆற்காடு வீராசாமி, செ. குப்புசாமி நெப்போலியன் எம்.எல்.ஏ. இ.ஏ.பி.சிவாஜி ஆகியோர் உள்ளனர்.

# தூர்தர்ஷன் 17 அலைவரிசைகளை உலகம் பூராகவும் ஒளிபரப்பும் உரிமையை வெளியாருக்கு வழங்க முடிவு

(புதுடில்லி)

" உலகம் முழுவதும் தூர்தர்ஷனின் 17 அலைவரிசைகளையும் ஒளிபரப்பும் உரிமை வழங்க கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது." தூர்தர்ஷனுக்கு ஆறு தேசிய சேனல்களும் 11 மொழிவாரி சேனல்களும் உள்ளன. இரண்டு கோடி இந்தியர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். பி.பி.சி., சி.என்.என். போல தூர்தர்ஷனும் உலகப் புகழ்பெற வேண்டும் என பிரமதர் மன்மோகன்சிங் விரும்புகிறார். உலகம் முழுவதும் தூர்தர்ஷனின் அலைவரிசைகளை ஒளிபரப்பும் உரிமை வழங்க கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது என பிரசார்பாரதி தலைமை நிர்வாகி கே.எஸ்.சர்மா கூறியுள்ளார்.

பாகிஸ்தானுடன் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டியின் நேரடி ஒளிபரப்பு உரிமையைப்பெற தூர்தர்ஷன் முயற்சிக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு இதில் நடவடிக்கை எடுக்கப்படும். டி.டி.எச். ஒளிபரப்பில் விரும்பத்தகாத சேனல்கள் நுளைந்து விடாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் தூர்தர்ஷன் நிகழ்ச்சிகள் மற்றும் ஒளிபரப்புத் தரத்தை மேம்படுத்த ரூபாய் 100 கோடி செலவிடப்படும். பிரசார் பாரதிக்கு ஆண்டுவருமானம் ரூபாய் 700 கோடி, செலவு ரூபாய் இரண்டாயிரம் கோடி இவ்வாறு சர்மா கூறினார்.



நடிகர் சங்கத் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட விஜயகாந்த், பொதுச் செயலாளராக சரத்குமார், உபதலைவர்கள் நெப்போலியன், எஸ்எஸ் சந்திரன் மற்றும் செயற்குழு உறுப்பினர் ராதாரவி ஆகி யோருக்கு மாலை அணிவித்து சங்க உறுப்பினர்கள் வாழ்த்துக் கூறியபோது.

# பிறக்கும் ஒவ்வொரு பெண்குழந்தைக்கும் இரண்டு தென்னங்கன்றுகள் வழங்கப்படும்

## -தமிழக அரசு திட்டம்

(சென்னை)

கிராமப்புற பெண் குழந்தைகளின் கல்விக்கு உதவும் வகையிலும் தென்னை சாகுபடி பரப்பளவை அதிகரிக்கும் வகையிலும் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் தலா 2 தென்னங்கன்றுகளை இலவசமாக வழங்கும் புதிய திட்டத்தை முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டுவரத் திட்டமிட்டுள்ளார்.

இந்தப்புதிய திட்டம் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு பெண் குழந்தைகளுக்கு கல்வி அளிக்க முடியும் என்ற எண்ணத்தில் உருவாக்கியுள்ளார். திட்டத்தின் கீழ் கிராமங்களில் பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் தலா 2 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். குழந்தை பிறந்த ஒரு ஆண்டுக்குள் தென்னங்கன்று கொடுக்கப்படும். வழங்கப்பட்ட தென்னங்கன்றுகள் அந்தக் குழந்தைக்கு 5 வயது பூர்த்தியாகி பள்ளிக்குச்செல்லும் காலத்தில் காய்க்கத் தொடங்கிவிடும். ஒரு மரத்திலிருந்து சராசரியாக ஆண்டுக்கு 100 தேங்காய் கிடைப்பதன் மூலம் ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் கிடைக்கும்.

இந்த வருமானம் பெண்குழந்தையின் கல்விச் செலவுக்கு உதவியாக இருக்கும் அதேநேரத்தில் தென்னையின் சாகுபடி பரப்பளவும் அதிகரிக்கும்.

இந்தத்திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில் 1இலட்சம் பெண்குழந்தைகளுக்கு தலா 2 இலவச தென்னங்கன்றுகள் வீதம் 2இலட்சம் கன்றுகளை வழங்க வேளாண்மைத்துறை முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் 3.46 இலட்சம் ஹெக்டர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. 6கோடியே 6ஆயிரம் மரங்கள் மூலம் 286 கோடி தேங்காய்கள் உற்பத்தி ஆகின்றன.

அகில இந்திய அளவில் தென்னை சாகுபடி கேரளத்துக்கு அடுத்தபடியாக தமிழ் நாடு 2ஆவது இடத்தில் உள்ளது. ஆனால் உற்பத்தியில் தமிழகம் தான் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்தப் புதிய திட்டம் அடுத்த மாதம் தொடங்கப்படுகிறது. இதன் மூலம் தேங்காய் உற்பத்தி மேலும் அதிகரிக்கும்.


# முக்கிய அறிவித்தல்

**மணல்/கிரவல் அகழ்வு வவுனியா வடக்கு பிரதேச சபைப் பிரிவு**

**பின்வரும் இடங்களில் மாத்திரம் மணல்/கிரவல் அகழ்வு செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.**

மணல் அகழ்வு செய்யும் இடங்கள்

1. கனகராயன் ஆறு (பழையவாடி, பரந்தன், விஞ்ஞானகுளம், பழைய கண்டி வீதி, புற்குளம்)
2. குடமுறுட்டி ஆறு
3. மருதோடை ஆறு
4. சமளங்குளம் ஆறு
5. பாலியாறு (புதூர்)

கிரவல் அகழ்வு செய்யும் இடங்கள்

1. பெரிய குளம் கிரவல் குவாறி
2. நொச்சிக்குளம் கிரவல் குவாறி
3. சூடுவெந்தான் கிரவல் குவாறி
4. நையினாமடு சின்னப்பூவரசங் குளம் வீதியில் உள்ள கிரவல் குவாறி

இவ்விடங்களில் மணல், கிரவல் ஏற்றுவதற்கு முன் வவுனியா வடக்கு பிரதேசசபையின் கீழ் குறிப்பிட்டவாறு கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டையும், அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

1. சொந்தத் தேவைக்கு உழவு இயந்திரம் ஒருசுமை-ரூபா-50
2 ஒப்பந்தகாரருக்கும், பிரதேச சபை எல்லைக்கு வெளியே கொண்டு செல்வதற்கும் உழவு இயந்திரம் ஒரு சுமை-ரூபா 100
3. பாரவூர்தி ஒரு சுமை-ரூபா 350

எம்மால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தினை பரிசோதனை செய்வதற்கான அதிகாரம் காவல்துறை உறுப்பினர்கள், நிர்வாகசேவை அலுவலர்கள், கிராம அலுவலர்கள், பிரதேசசபை அலுவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அனுமதி பெறாது மணல்/கிரவல் ஏற்ற முயற்சித்தல் வீதியில் கொண்டு செல்லல் மற்றும் இரவு நேரங்களில் ஏற்றுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் மணல்/ கிரவல் அகழ்தல் சட்டவிரோதமானதாகும். பிரதேச சபை அனுமதிப்பத்திரமின்றி மணல் கிரவல் ஏற்றுமிடத்து ரூபா 2000 தண்டப் பணமும் தடைசெய்யப்பட்டுள்ள இடங்களில் ஏற்றுவோருக்கு ரூபா 5000 தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிறுவனங்களும், பொதுமக்களும் இவ்விடயத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கா.ஞா.அகஸ்தீன்**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேசசபை**
**நெடுங்கேணி.**

(சி.11100)

## ஒருநாள் போட்டித் தொடர்

# சிம்பாப்வேயைத் தோற்கடித்த பங்களாதேஷ் வரலாற்றுத் தொடர் வெற்றியைப் பதிவாக்கியது



பங்களாதேஷில் நடைபெற்ற சிம்பாப்வேயுடனான ஒரு நாள் கிரிக்கெட் தொடரை வெற்றிகண்ட பங்களாதேஷ் அணி தனது முதலாவது வரலாற்றுத் தொடர் வெற்றியைப் பெற்றுள்ளது. நேற்று டாக்காவில் நடைபெற்ற 5 ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 49 ஓவரில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 198 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. அவ்வணியில் பார்னி ரோஜர் 84 ஓட்டங்களைப் பெற்றார். 36 ஆவது ஓவரில் 132 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையிழந்திருந்த சிம்பாப்வே ஏனைய எட்டு விக்கெட்டுக்களையும் வெறும் 66 ஓட்டங்களில் இழந்தது.

அடுத்து 199 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய பங்களாதேஷ் 33 ஓவரில் 2 விக்கெட்டுக்களை மட்டுமிழந்து 202 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

அவ்வணியின் மொகமட் ரபிக் 4 சிக்சர்கள் 7 பவுண்டரிக்கள் உட்பட 8 ஓட்டங்களையும் அப்டா அகமட் 4 பவுண்டரிகள் 1 சிக்சர் உட்பட 66 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். மொகமட் ரபிக் இரண்டாவது முறையாக சதம்பெறும் வாய்ப்பை இழந்தார். இவர் டெஸ்ட் தொடரிலும் சதம் பெறத்தவறியமை குறிப்பிடத்தக்கது.



இந்த வெற்றியின் மூலம் 3-2 என்ற கணக்கில் பங்களாதேஷ் சிம்பாப்வேயை வெற்றிகொண்டு வரலாற்றை ஆரம்பித்துள்ளது.

இப்போட்டியில் சிம்பாப்வே வீரர்கள் டியோன் ஏப்ரகாம், டக்ளஸ் ஹொன்டோ ஆகியோருக்குப் பதிலாக உஷிமுஷி நிபண்டாவும் எம்லுலிகி என்கலாவும் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சைச் சீர்செய்ய அவுஸ்திரேலிய உயிரியல் நிபுணர் நியமனம்



இந்தியாவின் சுழல் பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங்கின் சர்சைக்குள்ளாகியிருக்கும் தூஸ்ரா பந்து வீச்சு முறையைச் சீர்செய்ய அவுஸ்திரேலிய உயிரியல் பொறிமுறை நிபுணர் புருஸ் எலியட் முன்வந்திருக்கிறார்.

கடந்த டிசம்பர் மாதம் சிட்ட கொங்கில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் போது ஹர்பஜன்சிங்கின் பந்து வீச்சில் சந்தேகம் கிளம்பியது.இதைவிட 1998ஆம் ஆண்டிலும் இந்த விவகாரம் தலையெடுத்த போதிலும் சர்வதேச கிரிக்கெட்போட்டிகளில் கலந்து கொள்ள அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது.

இதற்கிடையில் சர்வதேச கிரிக்கட் சபை பந்து வீச்சைத் திருத்துவதற்கு வரும் 18ஆம் திகதி வரை இவருக்கு அவகாசம் கொடுத்திருப்பதாக இந்திய கிரிக்கட்சபை தெரிவித்துள்ளது.அத்துடன் இந்த விடயம் தொடர்பாக ஆராயவென முன்னாள் வீரர்களான ரவி சாஸ்திரி, லக்ஸ்மன் சிவராம கிருஷ்ணன், ஜவஹல் சிறிநாத் ஆகியோர் அடங்கிய குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.


இதற்கிடையில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டித் தொடர்களில் ஹர்பஜன்சிங் பங்கேற்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மேற்கிந்திய கிரிக்கெட் சபையின் நிதிவருமானத்தில் பெரும் வீழ்ச்சி

தொடர்ந்து இரு வருடங்களாக இலாபமீட்டித்தந்த தொலைக்காட்சி உரிமை வரி 2004 /2005 காலப்பகுதியில் 70 வீதம் குறைவடையும் என மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட்சபை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகளுடன் அந்நாட்டில் நடைபெற்ற போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையினால் பெரும்தொகைப் பணம் வருமானமாகக் கிடைத்திருப்பினும் 2004 ஆம் ஆண்டு இங்கிலாந்துடனான போட்டிகளின் போது பெறப்பட்ட வரி வருமானம் குறைவடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக மேற்கிந்தியக் கிரிக்கெட்சபையில் பாரிய நிதிப்பற்றாக்குறை யேற்படும் நிலை தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.




கிரிக்கெட் இந்தியா என்ற புத்தகத்தை கங்குலி கொல்கத்தாவில் வெளியிட்ட காட்சி. இந்தப் புத்தகத்தில் இந்திய வீரர்களின் சாதனைகள் இடம்பெற்றுள்ளன.

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் போட்டி 26 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றிபெற்றது



தென்னாபிரிக்காவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

7 ஒரு நாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டம் ஜோகன்னஸ் பார்க்கில் நேற்று முன்தினம் நடந்தது.

முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணியால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டமே எடுக்க முடிந்தது. போலக் 37 ஓட்டமும்,போஜி 33 ஓட்டமும் எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் ஆஸ்லேஹைல்ஸ் மூன்று விக்கெட்டும் டரன்கவ்,ஹோக்கர்ட்,கபீர்அலி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

பின்னர் இங்கிலாந்து விளையாடியது. 44 ஓட்டம் எடுப்பதற்குள் 3 விக்கெட்டை இழந்துவிட்டது. அந்த அணி 25.1 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 103 ஓட்டம் எடுத்து இருந்தபோது மழையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது



25 ஓவரைக் கடந்துவிட்டதால் 'டக்வொர்த் லீவிஸ்' விதி கடைப்பிடிக்கப்பட்டது.அதன்படி 25.1 ஓவரில் இங்கிலாந்துக்கு 78 ஓட்ட இலக்காக இருந்தது. அந்த அணியோ 103 ஓட்டம் எடுத்து இருந்தது. இதனால் 26 ஓட்ட வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

வோகன் 44 ஓட்டமும்,பீற்றர்சன் 22 ஓட்டமும் ஆட்டமிழக்காது பெற்றனர். போலக்,நிதினி,நெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்த வெற்றி மூலம் 7 ஒரு நாள் போட்டித் தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் முன்னணியில் இருக்கிறது. 2-ஆவது போட்டி வரும் 27ஆம் திகதி நடைபெறும்




## பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி லீக் போட்டி லாறா விளையாடுவதில் சந்தேகம்?



பாகிஸ்தானுக்கு எதிராக இன்று நடைபெறும் மும்முனை போட்டித் தொடரின் கடைசி லீக் ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவு அணித் தலைவர் பிறைன் லாறா விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அவருக்கு மணிக்கட்டில் காயமேற்பட்டுள்ளதே இச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. காயம் சிறியது என்பதால் லாறா போட்டியில் கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவரை விட ஆரம்ப பந்து வீச்சாளர் பெற்றோகொலினஸ், ராம் நரேஷ் சர்வான் ஆகியோரும் காயத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரன் யூனிஸ்கானின் தந்தையார் இறந்து விட்டதால் நாடு திரும்பியுள்ளார். அவர் இப்போட்டியில் கலந்து கொள்ளமாட்டார்.

இப் போட்டி இரு அணிக்கும் முக்கியத்துவம் வாய்ந்தாய் அமைந்துள்ளதால் இரு அணிகளும் வெற்றிக்கு கடுமையாக போராடும். இப்போட்டி குறித்து அணித் தலைவர் லாறா தெரிவிக்கையில்; இப்போட்டியில் உடல் ரீதியான உழைப்பை விட சிந்தனை ரீதி யான உழைப்பே முக்கியமானது என்றாா.

## கோரஸ் செஸ் போட்டி ஆனந்துக்கு 2 ஆவது இடம்



நெதர்லாந்து நாட்டில் கோரஸ் செஸ் போட்டி நடைபெற்றது. இதன் 13ஆவது மறறும் கடைசி சுற்று நேற்று முன்தினம் நடந்தது. இதில் இந்திய கிராண்ட் மாஸ்டர் விசுவநாதன் ஆனந் நெதர்லாந்தைச் சேர்ந்த இவ னை எதிர் கொண்டார்.

இந்தப்போட்டி சமனில் முடிந்தது. போட்டி முடிவில் ஹங்கோரி வீரர் பீற்றர் லிகோ சம்பியன் பட்டம் பெற்றார். ஆனந்த் 2 ஆவது இடத்தைப் பிடித்தார்.

## ஸ்பானிஷ் கால்பந்து தொடர் பார்சிலோனா அணிக்கு வெற்றி

ஸ்பானிஷ் லீக் கால்பந்து தொடரில் பார்சிலோனா அணி செவில்லா அணியை வீழ்த்தியது. முன்னணி கழக அணிகள் மோதும் ஸ்வானிஷ் லீக் கால்பந்துத் தொடர் மாட்ரிட் நகரில் நடக்கிறது. நேற்று நடந்த லீக் போட்டியின் முதல் பாதி முழுவதும் பார்சிலோனா ஆதிக்கமே காணப்பட்டது. ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் இந்த அணியின் சாமுவுல்ஸ் இடோ முதல் கோல் அடித்தார். இதையடுத்து 57 ஆவது நிமிடத்தில் செவில்லா அணியின் ஜூலியோ பாப்திஸ்தா 'சேம்சைடு' கோல் அடிக்க பார்சிலோனா 2-0 என்ற முன்னிலை பெற்றது.பின்னர் நட்சத்திர வீரரான ரொனால்டினோ, லுடோவிக் கெய்லி தலா ஒரு கோல் அடிக்க பார்சிலோனா அணி 40 என்ற முன்னிலையில் அபார வெற்றி பெற்றது. இந்த அணி தற்போது 51 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. ரியல் மாட்ரிட் (41 புள்ளி) இரண்டாவது இடத்திலும், வாலன்சியா (36) மூன்றாவது இடத்திலும் உள்ளன.

## புதிய உலக சாதனை படைத்தார்


அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் உள் விளையாட்டு அரங்கில் தடகளப்போட்டி நடந்து வருகிறது. இதன் 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் எதியோப்பிய வீராங்கனை திபாபா புதிய உலக சாதனை படைத்தார்.

அவர் 14 நிமிடம் 32.93 வினாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்தார். கடந்த ஆண்டு மற்றொரு எதியோப்பிய வீராங்கனை அட்ரா 14 நிமிடம் 39,29 வினாடிகளில் கடந்ததே உள் விளையாட்டரங்கில் சாதனையாக இருந்தது.



அவுஸ்திரேலிய ஓபன் கலப்பு இரட்டையர் பட்டத்தை வென்ற அவுஸ்திரேலியாவின் ஸ்காட் டிராபர், சமந்தா ஸ்டோசுர் ஜோடி

## சிந்தனைக்கு



பேரினவாதச் சித்தாந்தப் பிடியிலிருந்து விடுதலை பெற்று விழிப்புணர்வு அடையும் பொழுதுதான், தமிழரின் சுதந்திரப் போராட்டத்தின் புரட்சிகரத் தன்மையைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 01-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

# தொடரும் எச்சரிக்கை!

தம்முடனான ஒப்பந்தத்தை மீண்டும் ஒரு முறை மீறினால், அரசாங்கத்திலிருந்து விலகிக் கொள்வதாக ஜே.வி.பி யின் அரசியல் உயர் பீடம் எடுத்துள்ள முடிவானது இலங்கையின் அரசியல் போக்கை ஆழமாகக் கவனித்து வருபவர்களுக்கு ஆச்சரியமளிக்கும் விடயமாக இருக்கமாட்டாது.

ஜே.வி.பி அடிக்கடி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கத்தை அச்சுறுத்தியவண்ணமே உள்ளது. அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொண்டு விடுவோம் எனக் கூறிக்கூறியேஜே.வி.பி அண்மைக்காலமாகத் தனது காரியங்களைச் சாதித்து வந்தது. இது அரசாங்கத்திற்கு (சுதந்திரக் கட்சிக்கு) அடிக்கடி விடுக்கப்படும் சவால் போன்றதாகவும் இருந்தது.

ஆனால், சனாதிபதி சந்திரிகா சில வேளைகளில் ஜே.வி.பியின் அழுத்தத்திற்குப் பணிந்தவர் போன்றும், சில வேளை ஜே.வி.பியின் கருத்துக்கள் குறித்து அக்கறை வெளிக்காட்டாதவராகவுமே நடந்து வந்துள்ளார். இதன் காரணமாக சனாதிபதிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையில், அடிக்கடி முறுகல் நிலை தோன்றுவதும், ஜே.வி.பி அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக் கொண்டு விடுவோம் என எச்சரிக்கை விடுவதும் வழமையாக நடைபெறும் சம்பவமாகும்.

ஆனால், அண்மையில், ஜே.வி.பி. இவ்விடயம் குறித்து சற்றுத் தீவிரமாகப் பேசுவது போன்று தெரிகின்றது. அதாவது, அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதாரவை விலக்கிக் கொள்வது பற்றி அதன் அரசியல் உயர் மட்டக் குழுவில் பேசப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய தகவலானது, உண்மையானதாகவும் இருக்கலாம். சில வேளைகளில் இன்றைய அரசியல் சூழ்நிலையை மையப்படுத்தி வெளியானதாகவும் இருக்கலாம்.

சுனாமி பேரலைகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் இருந்தே சுதந்திரக் கட்சியினருக்கும்- ஜே.வி.பியினருக்கும் இடையிலான முறுகல் தீவிரம்பெற்றிருந்த அதாவது, ஜே.வி.பியினர் அரசாங்கத்தின் நிவாரணப் பொருட்களை தமது கட்சியின் நிவாரணப் பொருட்கள் போன்று விநியோகம் செய்தனர்.

அத்தோடு, இந்நிவாரணப் பணியைத் தமது கட்சிப் பிரச்சாரத்திற்குகென அவர்கள் பயன்படுத்தியும் கொண்டனர். இந்நிலையானது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையிலான முரண்பாடு தீவிரம் பெறக் காரணமானது. இவ்விவகாரம் சுதந்திரக் கட்சியினால் சனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது.

இதன் விளைவானது, அரச தொலைக்காட்சியில் ஜே.வி.பியின் பிரச்சாரம் தொடர்பான செய்திகளுக்குச் சனதிபதியால் தடை விதிக்கப் பட்டது. இது ஏற்கனவே, சனாதிபதிக்கும–ஜே.வி.பிக்கும் இடையில் காணப்பட்ட- முரண்பாட்டை மேலும் தீவிரமாக்கியதோடு, ஜே.வி. பியினர் கடும் வார்த்தைகளால் சனாதிபதி சந்திரிகாவை விமர்சனம் செய்யும் நிலையையும் தோன்றிவித்தது.

ஆயினும், ஜே.வி.பியினர் அரசாங்கத்துடனான உறவை முறித்துக் கொள்ளும் அளவிற்குத் தீர்மானங்கள் எதனையும் எடுக்கும் நிலை உருவாகவில்லை. ஆயினும், நிவாரணப் பணிகளில் அரசாங்கம் விடுதலைப்புலிகளையும் இணைத்துக்கொள்ளும் பட்சத்தில் ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு வெளியேறும் என்ற எச்சரிக்கை ஜே.வி.பியினால் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டுவருகிறமை சுட்டிக்காட்டத் தக்கது.

இந்நிலையில், நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானம் என்பனவற்றிற்கென சர்வதேச சமூகம் வழங்கும் நிதியுதவிகளைப் பயன்படுத்துவதற்கானதொரு கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில், பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும், அவை குறித்த தகவல்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகிவரும்வேளையில் ஜே.வி.பி.யின் தற்போதைய மிரட்டல் பற்றிய பேச்சு எழுந்துள்ளது.

ஜே.வி.பி அரசாங்கத்தை எச்சரித்து வருவது வழமையே எனினும தற்போதைய சூழ்நிலையில், ஜே.வி.பியின் எச்சரிக்கையை ஓரம்தள்ளிவிட முடியாது. அதாவது, அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒரு இணக்கப்பாடு ஏற்படுமெனில் ஜே.வி.பி முன்னர் போல் எச்சரிக்கையுடன் நின்றுவிடும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், இதுவே, ஜே.வி.பியின்அரசியல் மூலதனமாகக் கூடியது.

ஆகையினால், இன்றுமொரு தடவை உடன்பாட்டை மீறினால் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம் என்பது போன்ற ஜே.வி.பியின் எச்சரிக்கையானது, அரசாங்கம் விடுதலைப்புலிகள் தொடர்பான பேச்சுவார்த்தையின் முடிவைப் பொறுத்ததாகவே இருக்கும் என எதிர்பார்ப்பதற்கு வாய்ப்புண்டு. அதாவது, அரசாங்கம் - புலிகள் இடையில் ஓர் இணக்கப்பாடு ஏற்படுமானால் ஜே.வி.பி. தனது அஸ்திரத்தைப் பிரயோகிக்க வாய்ப்புண்டு. அவ்வாறு பிரயோகிக்குமனால் அது அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுமா?இல்லையா? என்று அறுதியிட்டுக் கூறிவிட முடியாது.

-முல்லை றிசானாவின் "விளையாடுவோம் வாசிப்போம்"-

# கிளி.யில் தேசியத் தலைவர் பணிப்பில் இஸ்லாமிய தமிழரின் நூல் அறிமுக விழா

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பணிப்புரைக்கு அமைவாக முல்லை றிசானாவின் "விளையாடுவோம் வாசிப்போம்" என்ற நூல் அறிமுகம் செய்யப்படுகிறது என தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தெரிவித்தார். நேற்றுக் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற "விளையாடுவோம் வாசிப்போம்" என்ற நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு அறிமுக உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நூல்களை வாசிப்புதில் பெரு விருப்புடையவர். அதேபோன்று எல்லோரும் நூல்களை வாசிக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை உடையவர். இந்நூலின் ஆசிரியர் தனது நூலை வன்னிப் பகுதியில் அறிமுகம் செய்ய வேண்டும் என தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கு, முல்லைத்தீவினைப் பிறப்பிடமாக் கொண்ட இந்நூல் ஆசிரியரான முல்லை றிசானா கடிதம் அனுப்பியிருந்தார்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நூல் அறிமுகம் செய்யும் பொறுப்பினை தமிழீழக் கல்விக் கழகத்திடம் ஒப்படைத்திருந்தார். நாம் இந்நூல் தொடர்பான மதீப்பிடு செய்து நல்ல நூல் என்ற நிலையில் இன்று இவ் அறிமுக விழாவினை நடத்துகின்றோம்.

மேலும் இலங்கைத்தீவில் தொடக்க கல்வியில் பல இடர்பாடுகள் நிறைந்துள்ளனசிறிலங்கா அரசு தொடக்கக் கல்வியில் அக்கறை காட்டாத நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக மாணவர்கள் மத்தியில் தொடக்கக் கல்வி சவால் மிகுந்ததாகவுள்ளது. தமிழர் தாயகத்தில் தொடக்கக் கல்வி வகுப்புக்களில் 30 வீத ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. இதன் காரணமாக தொடக்கக் கல்வி மாணவர்களின் கல்வி அபிவிருத்தி பெறாத நிலை காணப்படுகின்றது. இந்த வகையில் தொடக்கக் கல்வியில் வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் முல்லை றிசானா தனது நூலை மாணவர்கள் மத்தியில் உலாவ விட்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

# புலிகள் மீது மலையக மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளனர்

## -புலிகளின் மட்டு-அம்பாறைத் தளபதி ராம்

சுனாமி அனர்த்தத்தின் பின் தெற்கு மற்றும் மலையகப் பகுதிகளிலிருந்து நிவாரணப் பொருட்களுடன் மட்டு-அம்பாறையை அடைந்த மக்கள் அதிரடிப்படையினரின் வற்புறுத்தல்களையும், மிரட்டல்களையும் மீறிகொண்டுவந்த நிவாரணப் பொருட்களை தம்மிடம் வழங்கியதாகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறைத் தளபதி ராம் இணையத்தளம் ஒன்றிற்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த வருடம் தெற்கிலும் மற்றும் மலையகத்திலும் மழை, வெள்ளம், மற்றும் மண்சரிவு ஏற்பட்டபோது எந்தப் பேதமும் பாராது தமது காலடிதேடி நிவாரணப் பொருட்களுடன் விஜயம் செய்த புலிகள் ஒரு போதும் மக்களுக்கான நிவாரணப் பொருட்களை பறித்தெடுக்கின்ற வேலையைச் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை தம்மிடம் இருப்பதாக அந்த மக்கள் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நிவாரணப் பொருட்க்ளை தம்மிடம் ஒப்படைக்குமாறும் புலிகள் நிவாரணப் பொருட்களைப் பறித்து தமது முகாம்களுக்குக் கொண்டு சென்று விடுவார்கள் என்று அம்மக்களுக்கு அதிரடிப்படையினர் கூறிய போதும் அதனை அம்மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்பது புலிகள் மீது அவர்களுக்கிருக்கும் நம்பிக்கைக்கு நல்ல எடுத்துக் காட்டு என மட்டு அம்பாறைத் தளபதி ராம் மேலும் தெரிவித்தார்.

# காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் தமிழர்கள் புறக்கணிப்பு

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பின்னர் கடன் பெறுவதற்காக பல கஸ்ரங்கள்மத்தியில் கொழும்புக்குச் சென்றவேளை தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து ஆயுள் காப்புறுதி செய்த திருகோணமலையைச் சேர்ந்த நபரொருவர் கூறுகிறார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு .இருந்ததால் கொழும்புக்கு வந்து தொழில்முயற்சியை மீள ஆரம்பிக்க உதவி செய்யப்படுமென்று விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்ததாம். அதற்கிணங்க விண்ணப்பத்தை நிரப்பி அனுப்பியபின் 20.01.2005 அன்று வருமாறு அழைப்பு வந்ததாம். அன்று அவர் சென்றபோது நூற்றுக்கணக்கானோர் வந்திருந்தனர். சிங்களம் மட்டும் தெரிந்தவர்கள் நின்றல் வரலாம் என்று சிற்றூழியர் வந்து கூறினார். பின்னர் கணக்கை எடுத்தவர் வரலாம் என்று கூறினாராம்.இப்படி நேரத்தை இழுத்தடித்தனர். காலையில் ஒன்பது மணிக்குச் சென்ற நபர் பிற்பகல் 4.00 மணிவரை காத்திருக்க நேரிட்டது.அங்கு தமிழ்மட்டும் தெரிந்தோம் கேவலமாய் நடத்தப்பட்டனர்.

உள்ளுக்கும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏனென்றால் கவனிக்க ஒருவருமில்லை. நான் ஒருவாறு சிங்களம் தெரிந்தவர் மூலமாக உள்ளுக்குள் நுழைந்தேன் எனக் குறிப்பிடும் நபர் அங்கு சென்றார். எனக்கு முப்பது லட்சம் நட்டம் ஏற்பட்டுள் ளது. எனவே பத்து லட்சம் ரூபா கடன் தாருங்கள் என்று கேட்டபோது உங்களுக்கு வேண்டுமென்றால் ஐம்பதினாயிரம் ரூபாய் கடன் தரலாம் என அதிகாரிகள் குறிப்பிட்டனராம். நான் கடந்த ஒன்பது வருடங்களாக காப்புறுதி செய்து வருகிறேன். சுமார் எண்பதாயிரம் ரூபா வரை கட்டியிருப்பேன். அப்படிப்பட்ட எங்களை ஏன் தமிழர் என்பதால் மட்டும் புறக்கணிக்க வேண்டும்? இதற்கு கிராம சேவகர் பதிவுகள் எல்லாம் காட்டியும் பயனில்லையே என்று கூறுகிறார் பாதிக்கப்பட்டவர்.

# வீரவேங்கை பாவலனின் நினைவுக்கல் திரைநீக்கம்

(அலுவலக செய்தியாளர்)

2000 ஆம் ஆண்டு ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கையின்போது வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை பாவலன் அவர்களுடைய நினைவுக்கல் நேற்று விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பெற்றது.

நேற்றுக்காலை 10.00 மணிக்கு வீரவேங்கை பாவலன் அவர்களுடைய திருவுருவப்படம் அவரது தற்காலிக முகவரியான புன்னை நீராவியடி விசுவமடு இல்லத்திலிருந்து விசேடமாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துவரப்பட்டு விசுவமடு மாவீரர் மண்டபத்தில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

விசுவமடு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் கா.சீதாராம் தலைமையில் நடைபெற்ற வீரவணக்க நிகழ்வில் பொதுச்சுடரினை வவுனியா மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தர்மேந்திரா ஏற்றிவைக்க, திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை வீரவேங்கை பாவலன் அவர்களின் தாயார் ஏற்றிவைத்தார். தொடர்ந்து திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை விசுவமடு காவல்பணிமனைப் பொறுப்பாளர் ரகுராம் அணிவித்தார். வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் வீரவணக்க உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து நண்பகல் 11.50 மணியளவில் பூரண இரணுவ மரியாதையுடன் விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவுக்கல் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

(சோ,14)

-கத்திக் குத்திற்கு இலக்காகி-

# கொழும்பு கதிரேசனாலய பிரதம குரு மரணம்

கத்திக் குத்திற்கு இலக்காகிப் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த கொழும்பு கதிரேசன் வீதி கதிரேசனாலய பிரதமகுரு சபாரட்னக்குருக்கள் சடாநந்தக் குருக்கள் நேற்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார். கரவெட்டி துன்னாலையைச் சேர்ந்த இவர் கதிரேசன் ஆலய குருமார் இளைப்பாறும் அறையில் கடந்த திங்கட்கிழமை மாலை 6 .00 மணியளவில் இளைப்பாறிக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இருவர் "அப்பு சாமியைத் தெரியுமா ?" என வினவியுள்ளனர். அதற்கு அவா அவ்வாறு ஒருவரைத் தெரியாது என தெரிவிக்கவே அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு ஓட முற்பட்டனர் இச் சமயம் குருக்கள், ஓடமுற்பட்டவர்களில் ஒருவரை எட்டிப்பிடித்து விடவே திடீரென மற்றவர் தான்வைத்திருந்த கத்தியால் குருக்களின் வயிற்றில் குத்திவிட்டு சங்கிலியுடன் தப்பிச்சென்றுவிட்டார். வையிற்றில் ஏற்பட்ட படுகாயத்துக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த குருக்கள் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் காலை மரணமடைந்துள்ளார். இறக்கும்போது குருக்களுக்கு வயது 55.ஆகும்

# சமாதானத்திற்கான சந்தர்ப்பம் சமாதியாகும் அபாயம் எழுந்துள்ளது!

## சிறிலங்காப் பிரதமர் மகிந்தராஜபக்ஷ

சமாதானத்துக்கான சந்தர்ப்பம் சமாதியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அச்சம் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்திலிருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்பும் செயன்முறைகளில் நிலவும் இழுபறிகள் இந்த யாதார்த்தத்தையே சுட்டிக்காட்டுவதாக அவர் கூறியுள்ளார். அரசமைப்பு விவகார அமைச்சினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜே.வி.பியைத் தவிர சகல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிரமுகர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். அங்கு பிரதமர் மேலும் பேசுகையில், ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படும் முன்னர் யுத்தம் ஏற்படுவதற்கான உறுதியான வாய்ப்புக்கள் காணப்பட்டன. ஆனால் இயற்கை அனர்த்தத்தின் பின்னர் அந்த நிலை முற்றாக மாறி பிறிதொரு பரிணாமமெடுத்துள்ளது. நிலைமை நிம்மதியான ஒரு காலகட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளது. அதாவது சமாதானத்துக்கான வாய்ப்பை இந்த இயற்கை அனர்த்தம் ஏற்படுத்தியுள்ளது. வடக்கு கிழக்கு மீள்கட்டுமான விடயத்தில் விடுதலைப் புலிகளாலும் தமிழ்பாராளுமன்ற உறுப்பினர்களாலும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு விரைவில் பரிகாரம் காணப்படாவிட்டால் சமாதானத்துக்கான சந்தர்ப்பமாக திறந்திருக்கும் ஜன்னல் மூடப்பட்டுவிடலாம் என்றார். அங்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பேசுகையில், நாட்டை மீள்கட்டுமானம் செய்வதற்கு அரசுக்கட்டமைப்பில் உடனடி மாற்றம் அவசியம் என்று வலியுறுத்தினார்.

# நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் உளவளத்துணை பயிற்சிநெறி

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் (CHC) உளவளத்துணைச் சேவைக்குழுவின் ஒழுங்குபடுத்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் பணியாற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், தொண்டர்களுக்கான "உளவளத்துணை பயிற்சிநெறி" முல்லை மக்கள் நலன்புரிச்சங்க ஒத்துழைப்புடன் உன்னாப் புலவு சங்கீதா முன்பள்ளியில் கடந்த சனிக்கிழமை முதல் நேற்று திங்கட்கிழமை வரை பமிலியன் உள சமூக புனர்வாழ்வு நிறுவனத்தின் உளவளத்துணையாளர்களின் உதவியுடன் பயிற்சி வழங்கப்பட்டது.

இப் பயிற்சி நெறிக்கு உளவளத்துணைச் சேவைக்குழுவின் பயிற்சி ஆசிரியர் அருட்சகோதரி கிறிஸ்ரபெல் தலைமை தாங்கி இருந்தார்.

இப் பயிற்சி நெறியில் தமிழர் புனர்வாழ்வுக்கழக முன்பள்ளி ஆசிரியர்கள், தொண்டர்கள் என 45இற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இப் பயிற்சி நெறியின் முதல் நாள் நிகழ்வை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன உளவளத்துணைக்குழு இணைப்பாளர் ம.சுகுமார் அவர்கள் தொடக்கிவைத்தார். அன்னை இல்ல இயக்குனர் அருட்திரு ரெஜினோல்ட் அடிகளார் அவர்களும், முல்லை மக்கள் நலன்புரிச் சங்க இணைப்பாளர் க.பாலசுப்பிரமணியம் அவர்களும், தமிழீழ சுகாதாரசேவைகள் முல்லை மாவட்ட இணைப்பாளர் பெ.இராமலிங்கம் அவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# முரண்பாடு உள்ள அரசாங்கத்தால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது

## -அஸ்கிரிய மாகாநாயக்க தேரர் உடுகம புத்தரக்கித

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் முரண்பாடுகள் வலுப்பெற்று வருவதாக அஸ்கிரிய மகா நாயக்கர் உடுகம புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார். நேற்று சப்ரகமுவ மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆளும் கட்சியினர் மகாநாயக்கரை சந்தித்த போதே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்குள் இருக்கும் இரண்டு கட்சிகளிடையேயும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதை நாளுக்கு நாள் இரண்டு தரப்பினரும் விடுத்து வரும் அறிக்கைகளின் மூலம் தெரியவருகிறது. இவ்வாறு அரசாங்கத்துக்குள் முரண்பாடுகளை வைத்து கொண்டு நாட்டை கட்டியெழுப்ப முடியாது எனத் தெரிவித்த மகாநாயக்கர், நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால் கட்சிகளி டையே இருக்கும் முரண்பாடுகள் களையப்படுவது அவசியமாகும். என்றும் அவர் அறிவுரைவழங்கினார். (32)

# கச்சதீவு உற்சவத்திற்கான ஏற்பாடுகள் ஆரம்பம்!

கச்சைதீவு புனித அந்தோனியார் தேவாலய உற்சவம் எதிர்வரும் 18மற்றும் 19ஆம் திகதிகள் இடம்பெறவுள்ளது. இவ்வுற்சவத்தினை முன்னிட்டு அங்கு உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ சுகாதார வசதிகளை ஏற்படுத்த விசேட குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை-இந்திய கடல் எல்லைப்பகுதியில் இக்கச்சதீவுப் பகுதி அமைந்துள்ளது. இதனிடையே மேற்படி உற்சவத்திற்கான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான விசேட கூட்டமொன்று நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் இடம்பெற்றது. அரச அதிபர் சே. கணேஷ் தலைமையினில் இடம்பெற்ற இச்சந்திப்பில் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பற்றிக்ரஞ்சன்,மற்றும் அப்பகுதி பங்குத்தந்தை வணபிதா எல் ஜெபநேசரட்ணம் கடற்படை உயரதிகாரிகள், தொண்டமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (27)

# 'சுனாமி' நிவாரண அட்டைகளில் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபாடு!

சுனாமியால் பாதிக்கப்பட்ட அம்பாறையின் கரையோரப் பிரதேசத்தில் பிரதேச செயலாளர்களால் வழங்கப்பட்டுள்ள நிவாரண அட்டைகளில் பிரதேசத்திற்குப் பிரதேசம் பாரிய வேறுபாடும், பாகுபாடும் காணப்படுகிறது. சில பிரிவுகளில் உயிரிழப்புகளுக்கு ஒரு அட்டையும், வீடு முற்றாகப் பாதிப்புற்றோருக்கு ஒரு அட்டையும், உடைமை பாதிப்புக்கு ஒரு அட்டையும், தண்ணீர் வந்து போனமைக்கு ஒரு அட்டையும் வழங்கப்பட்டுள்ளன. சில பிரிவுகளில் ஒருபிரதேசத்திற்குள் வரும் அனைவருக்கும் ஒரு அட்டை, அதனை அண்டிய பிரதேசத்திற்கு ஒரு அட்டை, ஏனைய பிரதேசங்களிற்கு ஒரு அட்டை என்று வழங்கப்பட்டுள்ளன. கடற்கரையோரத்தில் உயிரிழந்து , வீடு முற்றாகத் தரைமட்டமாகிய ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்ட அட்டையும், 350 மீற்றருக்கு அப்பால் தண்ணீரே வராத குடும்பத்திற்கு வழங்கப்பட்ட அட்டையும் ஒன்றாக இருப்பது மக்கள் மத்தியில் ஆத்திரத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. உயிரிழந்து உடமையிழந்தவனும், தண்ணீரே காணாதவனும் 5000ரூபா, 2500 ரூபா மற்றும் ஏனைய சலுகைகளையும் ஒன்றாகப் பெறுவது அநீதியானது, பாரபட்சமானது எனவும் இந்நடவடிக்கைகளுக்கு எதிராக விரைவில் போராடுவோம் என்று அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்..

## என்பு முறிவுக்கான விசேட சிகிச்சை

எதிர்வரும் 05.02.2005ஆம் திகதி முதல் 10.02.2005 வரை புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர். பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் மலேசியாவில் இருந்து வருகை தந்திருக்கும் என்பு முறிவுக்கான சத்திர சிகிச்சை நிபுணர்களால் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே மேற்படி சத்திர சிகிச்சை அல்லது ஆலோசனைகள் பெற வேண்டியவர்கள் 01.02.2005 இல் இன்றிலிருந்து புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மேற்படி மருத்துவமனையில் பதிவுகளை மேற்கொள்வதுடன் மருத்துவர் சிவபாலன் அவர்களின் சிபார்சினைப்பெற்று சிகிச்சையை மேற்கொள்ளுமாறு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் வேண்டப்படுகின்றீர்கள்.

## அலுவலகம் இடமாற்றம்

யாழ்.மாவட்ட சுனாமி அனர்த்த ஒருங்கிணைப்புச் செயலணியின் தலைமை அலுவலகம் இடமாற்றம் செய்யப்படுகிறது.

இதுவரையில் வ...மராட்சி வதிரியில் இயங்கி வந்த இச் செயலணி அலுவலகம் இன்று முதல் பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத் தெருவில் இயங்கவுள்ளது. (33)

## தொடருந்து....

பொலிஸ் அதிகாரி வம்சநாதா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி அந்த இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தியது. மறியற் போராட்டதில் ஈடுபட்ட பாதிக்கப்பட்ட மக்களைப்பொலிசார் விசாரித்த போது, டிசம்பர் 26 ஆம் திகதியிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினது நிவாரண உதவி எதுவும் வழங்கப்படவில்லை என்று முறையிட்டனர். உடனடியாக அப்பகுதி கிராமசேவையாளரை பொலிசார் அழைத்துக்கொண்டு, மறியற் போராட்டம் நடந்த இடத்திற்கு அழைத்து வந்தனர். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் தொடர்ந்து நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பொலிசார் உறுதியளித்ததையடுத்து மறியற் போராட்டம் கைவிடப்பட்டது. காலை 7.00 மணிக்கு புறப்பட வேண்டிய கொழும்பு பயணிகள் தொடருந்து, மறியற் போராட்டம் காரணமாக ஒரு மணித்தியாலம் தாமதமாகவே திருமலையிலிருந்து புறப்பட்டது.

டிசம்பர் 26 சுனாமித் தாக்கத்தின் போது கடல் நீர் தொடருந்து ஊழியர்களின் விடுதிகளுக்குள் புகுந்தும்,வீடுகள் சுமார் 5 அடி நீரில் மூழ்கியதால் அவர்களின் உடமைகள் முற்றாகச் சேதமடைந்தன.

தொடருந்து ஊழியர்களின் குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கடந்த சனிக்கிழமை நிவாரண உதவிகளை வழங்கியது குறிப்பிடத்தக்கது. (25)

## ஈ.பி.டி.பி...

ஆனபோதும் தொடர்ந்தும் நேற்றும் நிவாரண வழங்கல் என (பத்தாயிரம்)10,000 ரூபா பணம் வழங்கப்படுவதாக் பொய்ப்பிரச்சாரம் செய்து தமக்குச் சார்பான சில மக்களை வரவழைத்து நிவாரணம் வழங்கியுள்ளனர்.

நிவாரணத்துக்கென பாதிக்கப்படாத வெளி மக்கள் சிலர் சென்றிருந்தபோதும் அவர்களுக்கு 2kg அரிசி,பருப்பு,சீனி,2 புற்பாய் என்பன வழங்கினர். ஆனால் 10,000 (பத்தாயிரம்) ரூபா பணம் வழங்கப்படாத பொய்ப்பிரச்சாரம் ஒன்றை ιம் மேற்கொண்டிருந்தனர்.

மேற்படி சம்பவத்தினை அற ந்த சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையத்தில் வாழ்ந்துவந்த மக்கள் பெருந்தொகையான இளைஞர்கள்,ஈ.பி.டி.பி தேசவிரோதிகளின் இச்செயற்பாட்டை முறியடிக்கும் விதமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு மேற்படி நிவாரணப் பணியை முறியடித்திருந்தனர்.மேற்படி மக்களால் ஈ..பி.டி.பி தேசவிரோதிகளின் செயற்பாட்டை முறியடித்த மக்கள் பெரும் ஆக்குரோசம் கொண்டெழுந்திருந்ததனால். மாலை 3.00 மணிவரை மந்திகைப் பகுதியில் பெரும் பதற்ற நிலைமை உருவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கா)

## பாலாலி...

அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.இந்த நிலையில இந்த வழக்கு விசாரணையை எதிர் வரும் மார்ச் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த உயர்நீதிமன்றம் அன்றையதினம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள காணிக்காக மாற்றுக் காணியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக மனுதாரர்களின் பதிலை அளிக்குமாறு உத்தரவிட்டது. (32)

## யாழ்....

இவ்வாறான நவீன மின் பிடி உபகரணத்தை வழங்குவதற்கான உறுதி மொழியினை நேற்று யாழ். வந்த நோர்வேயின் உதவும் அமைப்பின் பணிப்பாளர் சான் வீனஸ் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளன தலைவர் சூரிய குமாரிடம் வழங்கியுள்ளார்.

இதேவேளை சுனாமியால் சேதமடைந்துள்ள யாழ். குடாநாட்டின் கடற்றொழில் துறையை மேம்படுத்துவதற்கு நவீனத்துவம் வாய்ந்த உதவிகளை வழங்க முன்வருமாறு கடற் படைச் சிறப்புத் தளபதி கேணல் சூசை சர்வதேச சமூகத்தினருக்கு அழைப்பு விடுத்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. (33)

## அழையா....

வதற்காக நேற்று முற்பகல் இக் கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் எதிர்பாராத வகையில் திடீரென ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ அங்கு நுழைந்தார். விடுதலைப்புலிகள் தரப்பில் இக் கூட்டத்தில் கலந்து கொண்ட மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் கௌசல்யன் இதற்கு ஆட்சேபனை தெரிவித்தார். அப்போது ஜே.வி.பி. உறுப்பினரை நோக்கி அழைப்பின்றி எவ்வாறு கூட்டத்திற்கு வருகை தந்தீர்கள் என்று கௌசல்யன் கேள்வி எழுப்பினார். தான் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்ததாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் கூறினார். இதனையடுத்து விடுதலைப்புலிகள் இந்தக் கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டனர். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன், குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏற்கனவே ஒரு தடவை நிவாரண உதவி என்ற போர்வையில் இப் பகுதிக்கு வந்து இனவாத அடிப்படையில் பேசியுள்ளார். வடக்கு கிழக்கு பிரிக்கப்பட வேண்டும் என்று பிரச்சாரங்களையும் மேற்கொண்டுள்ளார். எமது தேசியத் தலைவரின் படங்களை அகற்ற வேண்டும் என்று அரசாங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அது மட்டுமன்றி குறிப்பிட்ட குழுவில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அங்கத்துவம் வழங்கப்படவில்லை. அதனை மீறி அவர் நடந்து கொண்டதால் நாம் வெளியேறினோம் என்றார். இது தொடர்பாக திருக்கோவில் பிரதேச செயலாளர் வி.கே.தவராஜாவிடம் கேட்டபோது,எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தான் அழைப்பு விடுக்கவில்லை என்பதை, குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினரிடம் தான் வலியுறுத்திக்கூறிய போதிலும் அதனை மீறும் வகையில் அவர் நடந்து கொண்டதாகக் கூறினார்.

## சர்வதேசம்....

இதனால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சர்வதேச உதவிகளுக்காக ஏங்குகின்றனர்.

எனவே அனர்த்த நிவாரண மனிதநேயப் பணிகளில் தனிப்பட்ட பகைமைகளுக்கோ, அரசியல் இனபேதங்களுக்கோ இடமளியாது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சமமாக உதவவேண்டியது பொறுப்புள்ள அரசின் கடமையாகும்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளைப் புனரமைக்கவென சர்வதேசத்தால் வழங்கப்படும் உதவிகள் மனிதநேய நோக்குகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ள இணையம் இது குறித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. (33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது